www.surabooks.com

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 12ஆம் வகுப்பு

6 இயல்கள் கொண்ட புதிய பதிப்பு

### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- **நம்மை அளப்போம்** பகுதி வினாக்கள் பிரிக்கப்பட்டு **செய்யுள், உரைநடை, விரிவானம், இலக்கணம்** என அந்தந்த பகுதிகளில் **புத்தக வினா** என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தவிர **கூடுதலாக பலவுள் தெரிக, குறுவினா, சிறுவினா, நெடுவினாக்கள் விடைகளுடன் தரப்பட்டுள்ளன.**
- **கற்பவை கற்றபின், மொழியோடு விளையாடு, மொழியை ஆள்வோம், மொழித்திறன் பயிற்சிகள்** ஆகிய பகுதிகளில் உள்ள **அனைத்து பயிற்சிகளுக்கும் முழுமையான விடைகளுடன் தரப்பட்டுள்ளன.**
- அரசு மாதிரி வினாத்தாள் 2019 (அ.மா.வி.), காலாண்டுத் தேர்வு 2019 & 2023, அரையாண்டுத் தேர்வு 2019 & 2023, மார்ச் தேர்வு 2020, செப்டம்பர் தேர்வு 2020, ஆகஸ்டு தேர்வு 2021, முதல் & இரண்டாம் திருப்புதல் தேர்வு 2022 மற்றும் அரசு பொதுத் தேர்வு மே 2022, உடனடித் தேர்வு – ஜூலை 2022, அரசு பொதுத் தேர்வு – மார்ச் 2023 & 2024, உடனடித் தேர்வு – ஜூலை 2023 & 2024, முதல் திருப்புதல் தேர்வு 2024 மற்றும் **பிடிஏ 1 முதல் 6 மாதிரி வினாத்தாள்** வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- சுராவின் இரண்டு மாதிரி வினாத்தாள்கள் புதிய பாடநூலின்படி (குறைக்கப்பட்ட இயல்) இணைக்கப்பட்டுள்ளன.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 98409 26027
enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : SG142


**எழுதி வழங்கியவர்கள்**

**செ. சசிகலாதேவி,** M.A., M.Phil.,(Tamil) PGDLA

**க. மதிமாறன்,** M.A., M.Ed, M.Phil, PGDCA

**கமலா**, M.A., B.Ed.,



**Also available for Std. - XI & XII**

Guides :

- சுராவின் தமிழ் உரைநூல்
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM)
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Bio-Botany & Botany (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Bio-Zoology & Zoology (EM/TM) (Short Version & Long Version)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Computer Applications (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)



**Head Office:**

**சுரா பப்ளிகேஷன்ஸ்**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.

**E-mail :** orders@surabooks.com

**Website :** www.surabooks.com

**For Orders Contact**

80562 94222

81242 01000

81243 01000

96001 75757

98409 26027


14/02/2025





www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக. – திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பன்னிரெண்டாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

நம்மை அளப்போம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்

**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,

(சுரா பதிப்பகம்)

*மாணவச் செல்வங்களே...*

**குறிப்பு:**

- பாடப்பகுதியை முழுமையாகப் படிக்கவும், கதை போல உள்வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.
- தலைப்பு, ஆசிரியர் குறிப்பு, நுழையும்முன், சொல்லும் பொருளும், பாடலின் பொருள், இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், தெரிந்து தெளிவோம், நூல்வெளி என அனைத்தையும் ஒரு மதிப்பெண் நோக்கில் படிக்கவும்.
- இலக்கணப் பகுதிகளை எழுதிப் பார்த்தல் நலம். பாடப்பகுதியில் உள்ள புணர்ச்சி விதிகள் பொருந்தும் கூடுதல் சான்றுகள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. விதியோடு சேர்த்து பொருத்தி, படித்து பயிற்சி பெறுக.
- ஒரு மதிப்பெண் வினாக்களை நன்றாகப் படித்தால் குறுவினா, சிறுவினா, நெடுவினா தேர்வு எழுதும்போது உங்களுக்கு கைக்கொடுக்கும்.
- தேர்வில் ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு கேள்விகள் கேட்கப்பட்டால் கூடுதல் செய்திகள் தவிர்த்து எழுதினால் போதுமானது. திணை, துறை மற்றும் அணி வகை வினாக்களை படித்துக்கொள்க.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம் ஆகிய பகுதிகளில் நெடுவினாக்களுக்கு குறிப்புச் சட்டகம் இட்டு எழுதுதல் முழு மதிப்பெண் பெற வழி வகுக்கும்.
- **சுயமதிப்பீடு பயிற்சி நூலில் உள்ள வினாக்களுக்கு விடை எழுதி பயிற்சி பெறுக.**

**படித்ததை மீண்டும் மீண்டும் நினைவுப்படுத்திக் கொள்.**
**ஆழ்ந்து படியுங்கள்! வெற்றி உங்களுக்கே!!**



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

# பொருளடக்கம்


மனப்பாடச் செய்யுள் ........................................................ 1-4

| இயல் | பொருண்மை | பாடத்தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 1. | மொழி. கலை<br>**உயிரினும் ஓம்பப் படும்** | *தன்னேர் இலாத தமிழ் **(செய்யுள்)**<br>நமது மொழியின் அடையாளங்களை மீட்டவர் **(உரைநடை)**<br>இளந்தமிழே! **(செய்யுள்)**<br>தம்பி நெல்லையப்பருக்கு **(துணைப்பாடம்)**<br>தமிழாய் எழுதுவோம் **(இலக்கணம்)** | 5-54 | ஜுன் |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்<br>**பெய்யெனப் பெய்யும் மழை** | மதராசப்பட்டினம் **(உரைநடை)**<br>பிறகொரு நாள் கோடை **(செய்யுள்)**<br>*நெடுநல்வாடை **(செய்யுள்)**<br>முதல்கல் **(துணைப்பாடம்)**<br>நால்வகைப் பொருத்தங்கள் **(இலக்கணம்)**<br>*திருக்குறள் **(வாழ்வியல்)** | 55-112 | ஜுலை |
| 3. | பண்பாடு<br>**சுற்றத்தார் கண்ணே உள** | தமிழர் குடும்ப முறை **(உரைநடை)**<br>விருந்தினர் இல்லம் **(செய்யுள்)**<br>*கம்பராமாயணம் **(செய்யுள்)**<br>உரிமைத் தாகம் **(துணைப்பாடம்)**<br>பொருள் மயக்கம் **(இலக்கணம்)** | 113-162 | ஆகஸ்டு |
| 4. | கல்வி, அழகியல்<br>**செல்வத்துள் எல்லாம் தலை** | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் **(உரைநடை)**<br>நகுலன் கவிதைகள் **(செய்யுள்)**<br>*காவியம் **(செய்யுள்)**<br>*சிலப்பதிகாரம் **(செய்யுள்)**<br>சூரியனைப் பிரசவிக்கும் பாறை **(துணைப்பாடம்)**<br>மெய்ப்பாடு **(இலக்கணம்)**<br>*திருக்குறள் **(வாழ்வியல்)** | 163-232 | அக்டோபர் |




enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

| இயல் | பொருண்மை | பாடத்தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| 5. | நாகரிகம், தொழில், வணிகம், ஆளுமை **அருமை உடைய செயல்** | திரைமொழி (உரைநடை) | 233-276 | நவம்பர் |
| | | *தெய்வமணிமாலை (செய்யுள்) | | |
| | | பெருமாள் திருமொழி (செய்யுள்) | | |
| | | தேவாரம் (செய்யுள்) | | |
| | | நடிகர் திலகம் (துணைப்பாடம்) | | |
| | | படைப்பாக்க உத்திகள் (இலக்கணம்) | | |
| 6. | நாடு, சமூகம், நிருவாகம், மனிதம் **எல்லா உயிரும் தொழும்** | இலக்கியத்தில் மேலாண்மை (உரைநடை) | 277-318 | டிசம்பர் |
| | | *இரட்சணிய யாத்திரிகம் (செய்யுள்) | | |
| | | புறநானூறு (செய்யுள்) | | |
| | | கோடைமழை (துணைப்பாடம்) | | |
| | | தொன்மம் (இலக்கணம்) | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல், வல்லின மெய்களை இட்டு எழுதுதல், வல்லின மெய்களை நீக்கி எழுதுதல், வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், மரபுச்சொற்களை சொற்றொடரில் அமைத்து எழுதுதல், ஏற்ற வினா அமைத்து எழுதுதல், மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுதல், நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுதல், உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுதல், வாக்கியத்தில் இலக்கியச் சுவையை அறிந்து எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும். | | | 319-338 | |
| இரண்டு சுராவின் மாதிரி வினாத்தாள்கள் | | | 339-346 | |

* இக்குறியிடப்பட்டவை மனப்பாடப் பகுதி.



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

## TO ORDER WITH US

### SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'** Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

### DIRECT DEPOSIT

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** |
| Bank Branch | : Padi |
| IFSC | : SBIN0005083 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : UCBA0002100 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** |
| Bank Name | : **INDIAN BANK** |
| Bank Branch | : Asiad Colony |
| IFSC | : IDIB000A098 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : KVBL0001154 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** |
| Bank Name | : **FEDERAL BANK** |
| Bank Branch | : Anna Nagar |
| IFSC | : FDRL0001324 |

| | |
|---|---|
| A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

GPay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

### DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

### STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

# மனப்பாடச் செய்யுள்

## தன்னேர் இலாத தமிழ்

இயல் - 1

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

பா வகை : **நேரிசை வெண்பா**

அணி : **பொருள் வேற்றுமை அணி**

– தண்டி

செப். 2020; முதல் தி.தேர்வு 2022

ஜூன் 2023

## நெடுநல்வாடை

இயல் - 2

மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீழக் கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள் (1–12)

பாவகை : **நேரிசை ஆசிரியப்பா**

– நக்கீரர்

## திருக்குறள்

இயல் - 2

### இல்வாழ்க்கை

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். ஆக. 2021

### செய்ந்நன்றி அறிதல்

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. மே 2022; அரையாண்டுத் தேர்வு 2023

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. பிடிஏ–2

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. பிடிஏ–4,6

### வெகுளாமை

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். அ.மா.வி, கா. தேர்வு 2019; மார்ச் 2023

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். முதல் தி.தேர்வு 2022; ஜூலை–2022

### ஊழ்

19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். பிடிஏ–5

– திருவள்ளுவர்

www.surabooks.com

## கம்பராமாயணம்

இயல் - 3

1. ‘துன்பு உளதுஎனின் அன்றோ
 சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
 பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
 முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
 ஐவர்கள் உளர் ஆனோம். **(1995)**

பாவகை : **கலிவிருத்தம்**

பிடிஏ–1; காலாண்டுத் தேர்வு 2019; மார்ச் 2020

5. குகனோடும் ஐவர் ஆனேம்
 முன்பு; பின்குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
 எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
 நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
 புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

பா வகை : **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

– கம்பர்

## காவியம்

இயல் - 4

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

– பிரமிள்

www.surabooks.com



enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

## சிலப்பதிகாரம்

இயல் – 4

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை. (139 – 142)

பாவகை : ஆசிரியப்பா

– இளங்கோவடிகள்

பிடிஏ–5 ; ஜூலை–2022

## திருக்குறள்

இயல் – 4

### அறிவு உடைமை

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. பிடிஏ–1, 3; அரையாண்டுத் தேர்வு 2019

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். செப். 2020

### வினைத்திட்பம்

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். மார்ச் 2020; இரண்டாம் தி.தேர்வு 2022

11. உருவுகண்(டு) எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னார் உடைத்து. ஜூன் 2023, அரை. தேர்வு 2024

### உட்பகை

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. முதல் தி.தேர்வு 2024

### கள் உண்ணாமை

17. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர். ஜூன் 2024

### சூது

19. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்.

– திருவள்ளுவர்

மனப்பாடச் செய்யுள்

www.surabooks.com

## தெய்வமணிமாலை

இயல் - 5

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

**பாவகை :** **பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

- இராமலிங்க அடிகள்

இரண்டாம் தி.தேர்வு 2022; மார்ச் 2023

பிடிஏ–2, ஆக. 2021; கா.தேர்வு 2023

## இரட்சணிய யாத்திரிகம்

இயல் - 6

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

**பாவகை :** **அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

- எச்.ஏ. கிருட்டிணனார்

பிடிஏ–4, 6

மனப்பாடச் செய்யுள்

இயல் 1

உயிரினும் ஓம்பப் படும் - மொழி, கலை

# தன்னேர் இலாத தமிழ்

தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் - தண்டி

கவிதைப்பேழை

## கரு

* வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்.
* தமிழின் பரப்பையும், விரிவையும் ஆழத்தையும் புலவர் பலவாறு போற்றுவர்.
* உலகத்தின் புற இருளைப் போக்கும் கதிரவனையும் அக இருளைப் போக்கும் தமிழையும் ஒப்புமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் காட்டிய தண்டியாரின் பாடல் நமக்கு தரப்பட்டுள்ளது.

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | தண்டி |
| காலம் | : | கி.பி. (பொ.ஆ) 12-ஆம் நூற்றாண்டு |
| ஊர் | : | சோழநாட்டைச் சேர்ந்தவர் |

## நூற்குறிப்பு



தமிழ் மொழியின் ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவற்றுள் அணி இலக்கணத்தைப் பற்றி மட்டும் கூறும் நூல் தண்டியலங்காரம் ஆகும். **காவியதர்சம்** என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

**நூல் அமைப்பு :** இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.

**பாடப்பகுதி :** பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் பாடப்பகுதியாக அமைந்துள்ளது.

## பாடல்

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது**
**தன்னேர் இலாத தமிழ்!**

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| ஓங்கலிடை வந்து | - உயர்ந்த மலையின் மீது தோன்றி |
| உயர்ந்தோர் தொழ விளங்கி | - பண்பில் சிறந்த சான்றோர்கள் வணங்குமாறு தோன்றி |
| ஏங்கல் ஒலி நீர் | - ஆரவார ஒலியை எழுப்பும் கடல் நீர் சூழப்பட்ட |
| ஞாலத்து இருள் அகற்றும் | - உலகின் இருளை நீக்கும் |
| ஆங்கவற்றுள் | - அப்படி இருக்கக் கூடியவற்றுள் |
| மின்னேர் | - மின்னலுக்கு நிகரான ஒளியைத் தருகின்ற |
| தனியாழி | - ஒற்றைச் சக்கரத்துடன் |
| வெங்கதிர் ஒன்று | - வெம்மையான சூரியன் ஒன்றாகும் |
| ஏனையது | - மற்றொன்று |
| தன்னேர் இலாத தமிழ் | - தனக்கு நிகரில்லாத தமிழ் மொழியாகும். |

## பொருளுரை

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக விளங்குவது மற்றொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ் மொழி.


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
www.surabooks.com

**விரிவான விளக்கம்**

உலகின் இருளான புற இருளை அகற்றுவது சூரியன். மக்களின் அறியாமை என்னும் இருளை அகற்றுவது தமிழ். சூரியன் இல்லாவிட்டால் உலகின் இயக்கம் நடைபெறாது. தமிழ்மொழி இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பண்பட்டு விளங்காது. எனவேதான் நன்றி மறவாப் பண்புடைய சான்றோர்கள் சூரியனையும் தமிழையும் வணங்குகிறார்கள்.

மின்னல் போன்ற ஒளியினை சூரியன் தருகிறது. எனவே 'மின்னோர் தனியாழி வெங்கதிர்' என்று சூரியனை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சூரியனுக்கு உவமையாகக் கூற மின்னல் இருக்கிறது. ஆனால் தமிழுக்கு நிகரான உவமையைக் கூற எதுவுமேயில்லை. எனவே தான் 'தன்னேர் இலாத தமிழ்' என்று பெருமையுடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**பா வகை, அணி**

**பா வகை:** நேரிசை வெண்பா

**விளக்கம் :** வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று நான்கு அடிகள் கொண்டதாக வரும். இரண்டாம் அடியின் இறுதிச் சீர் தனிச் சொல்லாக அமையும். (ஆங்கவற்றுள்) நான்காம் அடியில் மூன்று சீர்கள் அமைந்திருக்கும்.

**அணி :** பொருள் வேற்றுமை அணி

**அணி விளக்கம் :** இரு வேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையைக் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது 'பொருள் வேற்றுமை அணி' ஆகும்.

**அருஞ்சொற்பொருள்**

| | |
|---|---|
| ஓங்கல் – மலை | ஞாலம் – உலகம் |
| தொழ – வணங்க (பெரிய தோள்கள்) | வெங்கதிர் – வெம்மையான கதிர்களை உடைய சூரியன் |
| ஏங்கல் – கடல் | மின்னோர் – மின்னலுக்கு நிகரான |
| ஒலி – ஆரவாரம் | தன்னேர் – தனக்கு நிகரான |

**இலக்கணக்குறிப்பு**

| | |
|---|---|
| உயர்ந்தோர் | வினையாலணையும் பெயர் (முதல் தி.தேர்வு 2022) |
| வெங்கதிர் | பண்புத்தொகை (ஆக. 2021; முதல் தி.தேர்வு 2022; மார்ச் 2023) |
| இலாத | 'இல்லாத' என்பதன் இடைக்குறை |
| இருளகற்றும் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| மின்னோர், தன்னோர் | நான்காம் வேற்றுமைத் தொகைகள் |
| விளங்கி, வந்து | வினையெச்சங்கள் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

**உயர்ந்தோர் – உயர் + த்(ந்) + த் + ஓர்** (பிடிஏ–3; முதல் தி.தேர்வு 2022)
- உயர் – பகுதி
- த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
- த் – இறந்தகால இடைநிலை
- ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

**வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ** (முதல் தி.தேர்வு 2022)
- வா – பகுதி 'வ' எனக் குறுகியது விகாரம்
- த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்
- த் – இறந்தகால இடைநிலை
- உ – வினையெச்ச விகுதி

**விளங்கி – விளங்கு + இ** (பிடிஏ–3; ஜூலை 2022)
- விளங்கு – பகுதி
- இ – வினையெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

1. **ஆங்கவற்றுள் –** ஆங்கு + அவற்றுள் — **குற்றியலுகரப் புணர்ச்சி** அ.மா.வி 2019; முதல் தி.தேர்வு 2022

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | ஆங்க் + அவற்றுள் |
| 2. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | ஆங்(க் + அ) வற்றுள் (க் + அ = க) = ஆங்கவற்றுள் என்றானது. |

**கூடுதல் சான்று :** உயர்ந்தோர் – உயர்ந்து + ஓர்

2. **தனியாழி –** தனி + ஆழி — **உடம்படுமெய் புணர்ச்சி** செப். 2020; மார்ச் 2023

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. இ ஈ ஐ வழி யவ்வும் | தனி + ஆழி – தனி + ய் + ஆழி |
| 2. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | தனியாழி என்றானது. |

3. **வெங்கதிர் –** வெம்மை + கதிர் — **பண்புப்பெயர் புணர்ச்சி** முதல் தி.தேர்வு 2022

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. ஈறுபோதல் | வெம்மை + கதிர் – வெம் + கதிர் |
| 2. முன்னின்ற மெய் திரிதல் | வெங்+கதிர் – ‘வெங்கதிர் என்றானது. |

4. **ஓங்கலிடை –** ஓங்கல் + இடை — **மெய்யீற்றுப் புணர்ச்சி**

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ | ஓங்கலிடை |

**கூடுதல் சான்று :** **இருளகற்றும் –** இருள் + அகற்றும்

## கற்பவை கற்றபின்

1. **‘தன்னேர் இலாத தமிழ்’ என்னும் தலைப்பில் சொற்பொழிவில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.**

முதல் தி.தேர்வு 2022

தமிழ்மொழியானது தமிழ் மக்களின் அடையாளம், பண்பாட்டின் நீட்சி; “கல்தோன்றா மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த மொழி தமிழ்மொழி”. மொழி தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது நம் மொழி மட்டுமே. தமிழ்மொழிக்கு இணையாக எம்மொழியும் இவ்வுலகில் இல்லை என்பது மிகையாகாது.

இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் பரவிக் கிடக்கிறது. தமிழ்மொழி பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் தமிழ் இன்றும் செழித்துக் கொண்டே இருக்கிறது.

உலகிலேயே சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழி தமிழ். தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களுக்கு ஈடாக உலகில் எம்மொழியிலுமில்லை. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் தமிழர்களின் அழகுணர்வு, மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. உணர்ச்சியைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வுகளைக் கொண்டு இலக்கியங்களைப் படைத்து உலக மொழிகளில் சிறந்த மொழியாக திகழச் செய்கிறார்கள்.

சங்க இலக்கியங்களின் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணைச் சார்ந்த செய்திகளையும் படிக்கும்போது பண்டைய தமிழர்களின் சிறப்பான வாழ்வுமுறை குறித்து வியப்பு உண்டாகிறது. இதனால்தான் தமிழ்மொழியானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உயிர்ப்போடு சிறந்த மொழியாக உலக மக்களால் போற்றப்படுகிறது. எனவே தன்னேர் இலாத தமிழ் மொழி என்பதில் மிகையாகாது.

## நம்மை அளப்போம் (புத்தக வினா)

**பலவுள் தெரிக.**

3. **''மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!'' – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயங்களைத் தேர்க.** பிடிஏ–1; ஜூலை 2022; மார்ச் 2024

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

விடை: **இ) அடிஎதுகை, சீர்மோனை**

**சிறுவினா**

பிடிஏ–1, 2; காலாண்டுத் தேர்வு 2019; ஆக. 2021; மார்ச் 2020 & 2024

3. **ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

(i) **இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் **பொருளணியில்** இந்த அடியானது இடம் பெற்றுள்ளது.

(ii) **பொருள் :** மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோர்களால் (உயர்ந்தோர்) வணங்கப்படுகின்ற **கதிரவன்,** ஓசை நிறைந்த **கடல் நீரால்** சூழப்பட்டுள்ள இந்த உலகத்தின் **புற இருளை** நீக்குகிறது.

(iii) **விளக்கம் :** மலையில் தோன்றி சான்றோரால் வணங்கப்படுகின்ற, **இருளைப்** போக்குகின்ற பொருள்கள் இரண்டு உள்ளன. ஒன்று மின்னலைப்போல் ஒளிர்கின்ற கதிரவன். மற்றொன்று **பொதிகைமலையில்** தோன்றி, வளர்ந்த, **மக்களின் அறியாமை** என்னும் **இருளைப்** போக்குகின்ற தனக்கு நிகரில்லாத **தமிழாகும்.**

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

1. **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிக்கான சான்று** அ.மா.வி 2019

அ) ஆங்கவற்றுள் ஆ) எத்திசை

இ) வெங்கதிர் ஈ) பூம்பாவாய்

விடை: **அ) ஆங்கவற்றுள்**

2. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்** முதல் தி.தேர்வு & மே 2022; காலாண்டுத் தேர்வு 2023

அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம்

இ) வீரசோழியம் ஈ) முத்து வீரியம்

விடை: **ஆ) தண்டியலங்காரம்**

3. **'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி' என்னும் பாடலில் பயின்று வந்துள்ள பாவகை:** முதல் தி.தேர்வு 2022

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா

இ) வஞ்சிப்பா ஈ) நேரிசை வெண்பா

விடை: **ஈ) நேரிசை வெண்பா**

4. **'வெங்கதிர்' என்னும் சொல்லின் பொருள் :** முதல் தி.தேர்வு 2022

அ) ஒளிர்கின்ற கதிரவன் ஆ) நிகரில்லாத தமிழ்

இ) பொதிகை மலை ஈ) புறஇருள்

விடை: **அ) ஒளிர்கின்ற கதிரவன்**

5. **'பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே' என்னும் தொடர் இடம் பெற்றுள்ள நூல் :** முதல் தி.தேர்வு 2022

அ) தண்டியலங்காரம் ஆ) திருக்குறள்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

விடை: **ஈ) நன்னூல்**



www.surabooks.com



6. தண்டியலங்காரம், ........................ என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது. மார்ச் 2023

அ) சூரிய நிழல் ஆ) வீரசோழியம்

இ) காவியதர்சம் ஈ) முத்துவீரியம்

விடை: இ) காவியதர்சம்

**குறுவினா**

1. **தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது?** பிடிஏ–3

வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது **தமிழ்.**

2. **தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?** பிடிஏ–6

பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, **மக்களின் அறியாமை** என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புமை இல்லாததுமாக விளங்குகின்ற **தமிழ்மொழியானது** கடலால் சூழப்பட்ட உலகின் புற இருளைப் போக்கும் **சூரியனை விட** உயர்ந்தது; தனக்கு நிகரில்லாமல் விளங்குவது ஆகும்.

3. **தண்டியலங்காரம் எவ்வகை நூல்?** அரையாண்டுத் தேர்வு 2019

தண்டியலங்காரம் அணி **இலக்கணத்தைக்** கூறும் நூல்.

4. **தண்டியலங்காரம் – குறிப்பெழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2019; முதல் தி.தேர்வு 2022

அணியிலக்கணத்தைக் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் ஒன்றாகும். இந்நூல் **காவியதர்சம்** என்னும் **வடமொழி** இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும். இந்நூல் **பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல்** என்ற **மூன்று** பிரிவுகளை உடையது.

**சிறுவினா**

1. **பொருள் வேற்றுமை அணியை எடுத்துக் காட்டு கூறி விளக்குக.**

**பொருள் வேற்றுமை அணி – விளக்கம்**

பிடிஏ–6; காலாண்டு, அரை.தேர்வு 2019; முதல் தி.தேர்வு 2022; ஜூலை 2022; ஜூன் 2024

இரு வேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையைக் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது **'பொருள் வேற்றுமை அணி'** ஆகும்.

**எடுத்துக்காட்டு:** ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரோன்(று) ஏனையது
தன்னோர் இலாத தமிழ்! – தண்டி

**அணிப்பொருத்தம்:** தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளை முதலில் கூறிப் பின்னர் **'தமிழ் தன்னிகர் இல்லாதது'** என்று வேறுபடுத்தியுள்ளதால் இது பொருள் **வேற்றுமை அணியாகும்**. இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

2. **'தன்னோர் இலாத தமிழ்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** மே 2022

**இடம் :** 'தண்டியலங்காரம்' என்ற அணியிலக்கண நூலில் **பொருளணியியல்** இந்த அடியானது இடம் பெற்றுள்ளது.

**பொருள் :** உலகின் புற இருள் போக்கும் வெங்கதிர்போல் அன்றி மக்களின் அக இருளைப் போக்கித் தன்னிகர் அற்றதாகத் தமிழ் விளங்குகிறது.

**விளக்கம் :** உலகின் இருளான புற இருளை அகற்றுவது **சூரியன்.** மக்களின் அறியாமை என்னும் **இருளை** அகற்றுவது தமிழ். சூரியன் இல்லாவிட்டால் **உலகின் இயக்கம்** நடைபெறாது. **தமிழ்மொழி** இல்லாவிட்டால் மக்களின் வாழ்க்கை பண்பட்டு விளங்காது. எனவேதான் நன்றி மறவாப் பண்புடைய சான்றோர்கள் **சூரியனையும் தமிழையும்** வணங்குகிறார்கள்.

சூரியனுக்கு உவமையாகக் கூற மின்னல் இருக்கிறது. ஆனால் தமிழுக்கு நிகரான உவமையைக் கூற எதுவுமேயில்லை. எனவே தான் **'தன்னோர் இலாத தமிழ்'** என்று பெருமையுடன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.



www.surabooks.com

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **“ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்” – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அடி எதுகை சொற்களைக் கண்டறி.**

அ) வந்து – உயர்ந்தோர் ஆ) ஓங்கலிடை – உயர்ந்தோர்
இ) ஓங்கலிடை – ஏங்கொலிநீர் ஈ) ஞாலத்து – இருளகற்றும்

**விடை: இ) ஓங்கலிடை – ஏங்கொலிநீர்**

2. **.......... என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது தண்டியலங்காரம்.**

அ) காவிய தர்சம் ஆ) இலக்கண கொத்து
இ) இந்திர வியாகரணம் ஈ) கௌமாரம் **விடை: அ) காவிய தர்சம்**

3. **தண்டியலங்காரத்தில் தமிழ் மொழிக்கு உவமையாகக் கூறப்பட்டது ............... .**

அ) சூரியன் ஆ) சந்திரன்
இ) இமயமலை ஈ) குற்றால மலை **விடை: அ) சூரியன்**

4. **தண்டியார் வாழ்ந்த காலம் ............... நூற்றாண்டு.**

அ) கி.பி. 12 ஆம் ஆ) கி.பி 8 ஆம்
இ) கி.பி. 7 ஆம் ஈ) கி.பி. 9 ஆம் **விடை: அ) கி.பி. 12 ஆம்**

5. **கூற்று 1 : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்...... என்னும் செய்யுளில் பொருள் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.**
**காரணம் 2 : இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.**

அ) கூற்றும், காரணமும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும், காரணமும் தவறு

**விடை: அ) கூற்றும், காரணமும் சரி**

6. **இரு வேறு பொருளுக்குமான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது..................**

அ) பொருள் வேற்றுமை அணி ஆ) சொல் பின்வருநிலையணி
இ) வேற்றுப் பொருள் வைப்பணி ஈ) வேற்றுமை அணி

**விடை: அ) பொருள் வேற்றுமை அணி**

7. **'மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது தன்னேர் இலாத தமிழ்' – இவ்வடியில் பயின்று வரும் நயம்.**

அ) அடி இயைபு ஆ) அடி எதுகை
இ) அ மட்டும் ஈ) அ, ஆ மட்டும் **விடை: ஈ) அ, ஆ மட்டும்**

8. **உயர்ந்தோர் – இச்சொல்லைப் பகுக்கும் முறை ...............**

அ) உயர்ந்து + ஓர் ஆ) உயர்ந்து + த் + ஓர்
இ) உயர் + ந் + ஓர் ஈ) உயர் +த்(ந்) + த் + ஓர்

**விடை: ஈ) உயர் + த்(ந்) + த் + ஓர்**

9. **ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல் ஆகிய விதிகளின் படிப் புணரும் சொல் –**

அ) தனியாழி ஆ) ஆங்கவற்றுள்
இ) வெங்கதிர் ஈ) உயர்ந்தோர் **விடை: இ) வெங்கதிர்**

**10. தண்டியலங்காரம் ........................ பெரும் பிரிவுகளை உடையது.**
அ) நான்கு ஆ) மூன்று
இ) ஆறு ஈ) இரண்டு **விடை: ஆ) மூன்று**

**11. இலக்கண நூலார், உரையாசிரியர்கள் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்ற நூல் ..............**
அ) தண்டியலங்காரம் ஆ) குவலயானந்தம்
இ) மாறனலங்காரம் ஈ) வீரசோழியம் **விடை: அ) தண்டியலங்காரம்**

**12. தண்டியலங்கார இலக்கண நூலின் ஆசிரியர் .......**
அ) தொல்காப்பியர் ஆ) பவணந்தி முனிவர்
இ) தண்டி ஈ) மாறன் **விடை: இ) தண்டி**

**13. தண்டியலங்காரம் ஒரு .................. நூல்.**
அ) தழுவல் ஆ) வழி இ) முதல் ஈ) சார்பு **விடை: அ) தழுவல்**

**14. பின்வருவனவற்றுள் வேறுபட்டதைக் கண்டறிக.**
அ) குவலயானந்தம் ஆ) இலக்கண விளக்கம்
இ) தண்டியலங்காரம் ஈ) மாறனலங்காரம் **விடை: ஆ) இலக்கண விளக்கம்**

## குறுவினா

**1. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம்.

**2. அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்.

**3. உலகத்தின் புற இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு **பொதிகை மலையில்** தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் **புற இருளை** அகற்றுவது ஒளிர்கின்ற **கதிரவன்** ஆகும்.

**4. மக்களின் அறியாமை இருளைப் போக்குவது எது?**
மக்களால் போற்றப்பட்டு, **உயர்ந்த மலைகளுக்கு** இடையே தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் **அக இருளைப்** போக்குவது தமிழ்மொழியாகும்.

**5. தண்டியலங்காரத்தின் பெருமை யாது?**
**இலக்கண நூலார், உரையாசிரியர்கள்** ஆகியோரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்ற நூல் **தண்டியலங்காரம்** ஆகும்.

☆ ☆ ☆



www.surabooks.com

உயிரினும் ஓம்பப் படும் - மொழி, கலை

# இயல் 1 நமது மொழியின் அடையாளங்களை மீட்டவர்

உரைநடை உலகம்

**கரு**

* வரலாற்றை ஆவணப்படுத்தும் வழக்கம் நமது நாட்டில் அரிதாகவே இருந்தது. ஆய்வு நோக்கில் வரலாற்றையும் பண்பாட்டையும் செழுமைப்படுத்தும் ஆளுமைகளின் ஆய்வும் போற்றத்தக்கது.
* வரலாற்றுத் துறைகளில் வெளிச்சம் பாய்ச்சிய ஆளுமைகளில் முக்கியமானவர் மயிலை சீனி. வேங்கடசாமி.
* மயிலை சீனி. வேங்கடசாமியின் இளமைக்கால வாழ்க்கை, தொடக்க கால ஆய்வுகள், வரலாற்று கலையியல், இலக்கிய ஆய்வுகள், பன்மொழிப்புலமை, இவைகள் குறித்து விளக்குகிறது இவ்வுரை நடைப்பகுதி.

**ஆசிரியர் குறிப்பு**



காலம் : 16.12.1900 முதல் 08.07.1980 வரை
பிறந்த இடம் : சென்னை மயிலாப்பூர்
தந்தை : சீனிவாசன் (சித்த மருத்துவர்)
சகோதரர் : சீனி. கோவிந்தராசன் (தமிழாசிரியர்)
இவருடைய தமிழாசிரியர்கள் : மகாவித்துவான் சண்முகம் பிள்ளை, பண்டித சற்குணர்
பணியாற்றிய இதழ் : திராவிடன்
ஆசிரியராகப் பணியாற்றிய பள்ளி: சாந்தோம் மாநகராட்சிப் பள்ளி

## கற்பவை கற்றபின்

1. **உங்கள் பகுதியைச் சேர்ந்த தமிழறிஞர் ஒருவரின் பணிகள் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

மாணவர்கள் : வணக்கம். ஐயா.

ஆசிரியர் : வணக்கம். நம் பகுதியைச் சேர்ந்த தமிழறிஞர் ஜெ.இராதாகிருஷ்ணன் அவர்களைப் பற்றி கலந்துரையாடல் செய்வோமா?

மாணவர்கள் : சரிங்க ஐயா...

ஆசிரியர் : இவர் 'நறுமுகை' என்னும் காலாண்டு இதழ் நடத்துகிறார். இதன் மூலம் இளம் படைப்பாளிகளை ஊக்குவித்தும் சிறந்தப் படைப்புகளை அச்சிட்டும் வெளியிடுகிறார்.

மாணவர்கள் : பாராட்டப்பட வேண்டிய செயல், ஐயா!

ஆசிரியர் : ஆமாம். இவர் 'நறுநிழல்' என்னும் இலக்கிய அமைப்பையும் துவக்கி, சிறந்தப் படைப்புகளை வெளியிடுகிறார்.

மாணவர்கள் : ஆமாம் ஐயா, அது மட்டுமல்ல 'நறுமுகை' என்னும் பதிப்பகம் துவக்கி அதன் மூலம் சிறந்த ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் போன்ற நூல்களையும் வெளியிட்டு இருக்கிறார்.

ஆசிரியர் : அதேபோல் கல்வெட்டுகளை ஆராய்ச்சிச் செய்து அதன் செய்திகளை புத்தகமாக வெளியிடுகிறார். ஆண்டுக்கு ஒருமுறை கலை பண்பாட்டு கலாச்சார விழா நடத்தி கலைகளையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்.



www.surabooks.com

**மாணவர்கள் :** கலைஞர்களை ஊக்கப்படுத்த அவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை பரிசு வழங்கி கௌரவிக்கிறார்.

**ஆசிரியர் :** அவருடைய தமிழ்ப் பணி சிறக்க வாழ்த்துவோம்.

2. **தமிழறிஞர்களின் பணிகளைத் தொகுத்துப் படத்தொகுப்பு உருவாக்கி வகுப்பறையில் படத்தொகுப்பு காட்சிப்படுத்துக.**

மாணவர்கள் தாங்களாகவே செய்து பார்க்க வேண்டும்.

## நம்மை அளப்போம் (புத்தக வினா)

### பலவுள் தெரிக.

1. **ச.த.சற்குணரின் உரை ஏற்படுத்திய ஆர்வத்தினால் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்**

மார்ச் 2020 & 2024
பிடிஏ–1, 3; அ.மா.வி 2019

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்துவமும் தமிழும்

**விடை: ஈ) கிறித்துவமும் தமிழும்**

2. **மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு**

அ) மத்த விலாசம் ஆ) தமிழ்நாட்டு வரலாறு
இ) அஞ்சிறைத் தும்பி ஈ) திசை எட்டும்

**விடை: இ) அஞ்சிறைத் தும்பி**

### குறுவினா

1. **'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.**

அ.மா.வி 2019; முதல் திருப்புதல் தேர்வு & ஜுன், அரை.தேர்வு 2024

(i) **'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்'** என்ற நூல் **மயிலை சீனி. வேங்கடசாமி** அவர்களால் எழுதப்பட்டது.
(ii) கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான **முதல்** நூலாகும்.
(iii) இந்நூல் **தமிழக அரசின் முதற்பரிசைப்** பெற்றுள்ளது.
(iv) இந்நூலின் முன்னுரையில் "தற்காலத்து தமிழ்ச் சமூகம் தனது பழைய அழகுக் கலைச் செல்வங்களை மறந்து தன்பெருமை அறியாமல் இருந்து வருகிறது. **'கலை'** என்று இப்பொழுது சினிமா மற்றும் இசைக்கலைகளையே குறிப்பிடுகின்றனர். **இலக்கியம்** மற்றும் ஏனையக் கலைகளை அறவே மறந்துவிட்டதால் இந்நூல் எழுதப்பட்டது" என்று **மயிலை சீனி. வேங்கடசாமி** குறிப்பிட்டுள்ளார்.

2. **'விரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப்பணியாக் கொண்டோன்' - யார், யாரைப் பற்றி எதற்காகக் கூறுகிறார்?**

(i) பாரதிதாசன், மயிலை சீனி. வேங்கடசாமி குறித்துப் பாராட்டி எழுதிய **கவிதையாகும்.**
(ii) உலகெங்கும் பரவியுள்ள தமிழர்களின் மேன்மையை மேலும் ஓங்கிடச் செய்வது ஒன்றையே தனது **உயிர்ப்பணியாகக்** கொண்டு **மயிலை சீனி. வேங்கடசாமி** உழைத்ததினால் **பாரதிதாசன்** இவ்வாறு பாராட்டியுள்ளார்.

### சிறுவினா

1. **மயிலை சீனி.வேங்கடசாமியின் வரலாற்று ஆய்வுகள் பற்றி விளக்குக.** பிடிஏ–5

**வரலாற்று ஆய்வுகள் :**

1950களில், கி.பி 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கிபி 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். **மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன்** ஆகியோர் குறித்த நூல்களை எழுதினார். இதனைத் தொடர்ந்து **மூன்றாம் நந்திவர்மன்** என்னும் பல்லவ மன்னனைப் பற்றியும் எழுதினார். இம்மன்னனைப் பற்றி தமிழில் எழுதப்பட்ட **முதல் நூல்** என்னும் பெருமையைப் பெற்றது இந்நூல்.

www.surabooks.com

**சங்க கால மூவேந்தர்கள் மற்றும் பிற மன்னர்கள் பற்றிய பதிவுகள் :**

சங்க கால மூவேந்தர்கள், **கொங்கு நாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர்** மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் மயிலையார் எழுதினார்.

**களப்பிரர் வரலாறு :**

சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். களப்பிரர்கள் ஆட்சிக் காலம் தமிழர்களின் வரலாற்றில் **இருண்ட காலம்** என்று மரபு வழிப்பட்ட வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருந்தனர். களப்பிரர் குறித்த ஆய்வை விரிவாக மேற்கொண்டு **'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'** என்னும் நூல் மூலம் புதிய கண்ணோட்டத்தை இவர் வெளிப்படுத்தினார்.

**நெடுவினா**

மார்ச் 2023; அரை. தேர்வு 2024

1. **மயிலை சீனி.வேங்கடசாமி ஓர் 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்பதனைச் சான்றுகளுடன் நிறுவுக.**

| குறிப்புச் சட்டகம் |
|---|
| முன்னுரை |
| தொடக்ககால ஆய்வுகள் |
| வரலாற்று ஆய்வுகள் |
| கலையியல் ஆய்வுகள் |
| இலக்கிய ஆய்வுகள் |
| முடிவுரை |

**முன்னுரை :**

மயிலையாரின் பல ஆய்வுகள் **தமிழுக்கு** முதன்முதலாக வழங்கப்பட்டவை. இவரது ஆய்வுகள் அறிஞருக்கு மட்டுமின்றிப் பொதுமக்களுக்கும் அறிவு விருந்தோம்பியவை. மயிலையாரின் ஆய்வு நூல்களில் வேண்டாத நூலிது என்றோ நூலில் வேண்டாத பகுதி என்றோ ஒதுக்க முடியாத வகையில் சிறந்த நூல்களை இயற்றியுள்ளார். **மயிலையார் ஓர் ஆராய்ச்சிப் பேரறிஞர்** என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் இக்கட்டுரையில் காண்போம்.

**தொடக்ககால ஆய்வுகள் :**

ச.த.சற்குணர் அவர்களின் உரையால் ஈர்க்கப்பட்ட மயிலையார் **'கிறித்துவமும் தமிழும்'** என்னும் நூலை இயற்றினார். அதன்பின் தமிழின் தொல் இலக்கியம், தொல் கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக **'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்'** ஆகிய நூல்களை இயற்றினார்.

**வரலாற்று ஆய்வுகள் :**

கி.பி. 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 9ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலங்களில் ஆட்சி புரிந்த மன்னர்களைப் பற்றிய ஆய்வில் மயிலையார் ஈடுபட்டார். அதன் விளைவாய் **மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், மூன்றாம் நந்திவர்மன்** ஆகியோர் குறித்த நூல்களை எழுதினார்.

மூன்றாம் நந்திவர்மன் பற்றி தமிழில் எழுதப்பட்ட **முதல் நூல்** என்னும் பெருமையைப் பெற்றது இவரது நூல். இவைத் தவிர சங்க கால மூவேந்தர்கள், **கொங்குநாட்டு மன்னர்கள், துளு நாட்டு மன்னர்கள், களப்பிரர்** மற்றும் இலங்கை குறித்த வரலாறு ஆகியவற்றையும் எழுதினார். களப்பிரர் குறித்த புதிய கண்ணோட்டத்தைக் **'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்'** என்னும் நூல் மூலம் வெளிப்படுத்தினார்.

**கலையியல் ஆய்வுகள் :**

கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வேங்கடசாமியே வழிகாட்டியாக விளங்கினார். தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் **'தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்'** என்னும் நூல், கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான **முதல் நூல்** ஆகும்.

மேலும் இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இறைவன் ஆடிய **எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள்** ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும்.

**இலக்கிய ஆய்வுகள் :**

மயிலையாரின் ஆய்வுப்பயணம் **தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள்** ஆகியவற்றை நோக்கி நகர்ந்தது. அதன் விளைவாக சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் (அரசியல்) ஆகிய நூல்களையும் எழுதினார். தமிழ்நாட்டு வரலாறு என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்கு சரியான சான்றாகும்.

தமிழியலுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்களையும் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டதின் விளைவாக, சாசனச்செய்யுள் மஞ்சரி, மறைந்து போன தமிழ் நூல்கள், ஆகிய நூல்களை எழுதினார். இவருடைய **'பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்'** என்னும் நூல் ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல் எனலாம். இதேபோல 'மறைந்துபோன தமிழ் நூல்கள்' என்னும் நூலில் **333 நூல்கள்** தொடர்பான குறிப்புகளை நம் முன் நிறுத்துகிறார்.

**முடிவுரை :**

ஆய்வுலகில் **மயிலை சீனி. வேங்கடசாமியின்** பங்களிப்பு மகத்தானது. தம் வாழ்வை முழுமையாகத் **தமிழியல் ஆய்வுக்கு** ஒதுக்கியவர். இவர் மேற்கண்ட பணிகளால் மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம் **'தமிழ்ப்பேரவைச் செம்மல்'** என்னும் விருதினை இவருக்கு வழங்கி கவுரவித்தது.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

### பலவுள் தெரிக.

**1. மயிலை சீனியார் அவர்களின் அரிய ஆவணப் பணிகளில் ஒன்று இந்நூல் :** செப். 2020

அ) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்　ஆ) மறைந்து போன தமிழ் நூல்கள்

இ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்　ஈ) அஞ்சிறைத் தும்பி

விடை: **ஆ) மறைந்து போன தமிழ் நூல்கள்**

**2. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன்கொடியில் பொறித்த சின்னம்** முதல் திருப்புதல் தேர்வு 2024

அ) வில்　ஆ) புலி　இ) யானை　ஈ) மீன்

விடை: **இ) யானை**

### குறுவினா

**1. வேங்கடசாமி அவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் எந்தெந்த இதழ்களில் வெளியாகின?** பிடிஏ–4

**குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி** போன்ற இதழ்களில் வேங்கடசாமி அவர்களின் ஆய்வுக்கட்டுரைகள் வெளியாயின.

### சிறுவினா

**1. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.**

பிடிஏ–1; மார்ச் 2020, 23; முதல் திருப்புதல் தேர்வு & ஜூன் 2024

**மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் :**

(i) மயிலை சீனி. வேங்கடசாமி 16-12-1900 ஆம் ஆண்டு **சென்னை மயிலாப்பூரில்** பிறந்தார். இவரின் தந்தை சீனிவாசன் ஒரு **சித்த மருத்துவர்.** இவரின் தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்.

(ii) தந்தையின் சித்த மருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே இவரை **வரலாற்றாய்வாளராக** உருவாக்கியது. இவர் தொடக்கப் பள்ளியில் **25 ஆண்டுகள்** ஆசிரியராகப் பணியாற்றினார்.

www.surabooks.com

(iii) **விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த.சற்குணர்** ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இவரது ஆய்வுக் கட்டுரைகள் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் வெளியாகின.

(iv) சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.

(v) தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட மயிலை சீனி. அவர்கள் தமிழ் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் உறுதியான பார்வை கொண்டவர்.

(vi) தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர். நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர். நமது பெருமைகளை ஆய்வு நோக்கில் விரித்துரைத்தவர். **நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.**

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

**1. 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற அடைமொழியால் குறிக்கப்படுபவர்**

அ) மயிலை சீனி. வேங்கடசாமி ஆ) சி.இலக்குவனார்
இ) தேவநேயப் பாவாணர் ஈ) பரிதிமாற் கலைஞர்

**விடை: அ) மயிலை சீனி.வேங்கடசாமி**

**2. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களால் எழுதப்படாத நூல் எது?**

அ) கிறித்துவமும் தமிழும் ஆ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்
இ) கொல்லிமலைக்குள்ளன் ஈ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

**விடை: இ) கொல்லிமலைக்குள்ளன்**

**3. கூற்று 1 : மயிலையாரின் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் என்னும் நூல் ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல் ஆகும்.**
**கூற்று 2 : மறைந்துபோன தமிழ்நூல்கள் என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப் பணிகளில் ஒன்றாகும்.**

அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி
இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி

**விடை: ஈ) கூற்று இரண்டும் சரி**

**4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| i) | தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் | 1. | ஆவண முன்னோடி நூல் |
| ii) | 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் | 2. | மீட்டுருவாக்க சான்று நூல் |
| iii) | தமிழ்நாட்டு வரலாறு | 3. | இலக்கிய ஆய்வு நூல் |
| iv) | களப்பிரர் ஆட்சியில் தமிழகம் | 4. | கலையியல் ஆய்வு நூல் |

அ) 4, 1, 2, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 2, 4, 1, 3

**விடை: அ) 4, 1, 2, 3**

**5. சீனி. வேங்கடசாமியின் ஆய்வுக்கட்டுரைகள் ................ இதழ்களில் வெளியாயின.**

1. குடியரசு, ஊழியன் 2. குயில், சுதேசமித்திரன்
3. செந்தமிழ்ச்செல்வி, லக்ஷ்மி 4. நவசக்தி, திராவிடன்

அ) 1 மற்றும் 3 ஆ) 2 மற்றும் 4
இ) 1 மற்றும் 2 ஈ) 3 மற்றும் 4

**விடை: அ) 1மற்றும் 3**

www.surabooks.com



**6.** **மயிலையார் எழுதிய முதல் நூல் ................**

அ) கொங்கு நாட்டு வரலாறு ஆ) தமிழ்நாட்டு வரலாறு

இ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ஈ) கிறித்துவமும் தமிழும் **விடை: ஈ) கிறித்துவமும் தமிழும்**

**7.** **தமிழின் தொல்இலக்கியம், தொல்கலை, தொல்லெழுத்து ஆகியவற்றில் கொண்ட ஈடுபாடு காரணமாக மயிலையார் எழுதிய நூல்கள் ...............**

அ) சாசனச் செய்யுள் மஞ்சரி, மறைந்துபோன தமிழ்நூல்கள்

ஆ) பழங்காலத் தமிழர் வணிகம், தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

இ) பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்

ஈ) கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு

**விடை: இ) பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்**

**8.** **மகேந்திரவர்மன் இயற்றிய மத்த விலாசம் என்ற நாடக நூலை ஆங்கிலம் வழியாக தமிழாக்கியவர்**

அ) முருகுசுந்தரம் ஆ) தணிகை உலகநாதன்

இ) மயிலை சீனி. வேங்கடசாமி ஈ) பாவலரேறு பாலசுந்தரனார்

**விடை: இ) மயிலை சீனி. வேங்கடசாமி**

**9.** **............... என்ற நூலில் மயிலையார் இலக்கிய இலக்கணப்பரப்பில் உறைந்திருந்த செய்திகளைத் தொகுத்து 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளைத் தருகிறார்.**

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் ஆ) சாசனச் செய்யுள் மஞ்சரி

இ) மறைந்துபோன தமிழ்நூல்கள் ஈ) துளு நாட்டு மன்னர்கள்

**விடை: இ) மறைந்துபோன தமிழ்நூல்கள்**

**10.** **பொருத்துக.**

| | அரசர்கள் | | மரபுச் சின்னங்கள் |
|---|---|---|---|
| i) | சேரன் | 1. | புலி |
| ii) | சோழன் | 2. | யானை |
| iii) | பாண்டியன் | 3. | வில் |
| iv) | பசும்பூண் பாண்டியன் | 4. | மீன் |

அ) 3, 1, 4, 2 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 3, 4, 2 ஈ) 2, 4, 1, 3 **விடை: அ) 3, 1, 4, 2**

**11.** **பசும் பூண்பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தியை ........... நூலின் மூலம் முதன் முதலில் வெளிப்படுத்தியவர் ............... ஆவார்.**

அ) புறநானூறு, பாரதிதாசன்

ஆ) குறுந்தொகை, மயிலை சீனி.வேங்கடசாமி

இ) அகநானூறு, மயிலை சீனி.வேங்கடசாமி

ஈ) நற்றிணை, மயிலை சீனி. வேங்கடசாமி **விடை: இ) அகநானூறு, மயிலை சீனி.வேங்கடசாமி**

**12.** **மயிலையாரால் எழுதப்பட்ட ............... என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது.**

அ) சங்க கால மூவேந்தர்கள் ஆ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

இ) கிறித்துவமும் தமிழும் ஈ) தமிழ்நாட்டு வரலாறு

**விடை: ஆ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்**

**13.** **கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் .................**

அ) கொங்கு நாட்டு வரலாறு ஆ) சங்க கால மூவேந்தர்கள்

இ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ஈ) சாசனச் செய்யுள் மஞ்சரி

**விடை: இ) தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்**

www.surabooks.com

14. **மயிலையாரின் கலையியல் ஆய்வு நூல்களில் பொருந்தாத நூல் ......................**

அ) இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்

ஆ) நுண்கலைகள்

இ) இசைவாணர் கதைகள்

ஈ) கொங்கு நாட்டு வரலாறு **விடை: ஈ) கொங்கு நாட்டு வரலாறு**

15. **ஒவ்வொரு நூற்றாண்டையும் எவ்வகையில் ஆவணப்படுத்துவது என்பதற்கான முன்னோடி நூல்**

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

ஆ) மறைந்து போன தமிழ் நூல்கள்

இ) மத்த விலாசம்

ஈ) தமிழ்நாட்டு வரலாறு **விடை: அ) பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்**

16. **கொங்கு நாட்டு வரலாறு என்ற நூல்**

அ) இலக்கிய ஆய்வு சார்ந்தது ஆ) மொழி ஆய்வு சார்ந்தது

இ) கலையியல் ஆய்வு சார்ந்தது ஈ) இவற்றில் எதுவும் இல்லை

**விடை: அ) இலக்கிய ஆய்வு சார்ந்தது**

17. **மயிலை சீனி. வேங்கடசாமியின் உருவ அமைப்பை வர்ணித்தவர் ......................**

அ) அரு.ராமநாதன் ஆ) புஷ்பா தங்கதுரை

இ) இந்திரா பார்த்தசாரதி ஈ) நாரண. துரைக்கண்ணன்

**விடை: ஈ) நாரண. துரைக்கண்ணன்**

18. **மயிலையாரின் தொடக்ககால ஆய்வு நூல்கள்**

அ) பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்

ஆ) மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன்

இ) நுண்கலைகள், இசைவாணர் கதைகள்

ஈ) தமிழ்நாட்டு வரலாறு, கொங்குநாட்டு வரலாறு **விடை: அ) பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும்**

19. **மயிலை சீனி.வேங்கடசாமியின் தந்தை ஒரு ...................... .**

அ) சித்த மருத்துவர் ஆ) ஆயுர்வேத மருத்துவர்

இ) அல்லோபதி மருத்துவர் ஈ) யுனானி மருத்துவர் **விடை: அ) சித்த மருத்துவர்**

20. **மயிலை சீனி.வேங்கடசாமியின் தமையனார் ...................... .**

அ) வரலாற்று ஆசிரியர் ஆ) தமிழ் ஆசிரியர்

இ) கணித ஆசிரியர் ஈ) அறிவியல் ஆசிரியர் **விடை: ஆ) தமிழ் ஆசிரியர்**

21. **மயிலை சீனி.வேங்கடசாமி எத்தனை ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்?**

அ) 24 ஆண்டுகள் ஆ) 26 ஆண்டுகள்

இ) 25 ஆண்டுகள் ஈ) 27 ஆண்டுகள் **விடை: இ) 25 ஆண்டுகள்**

22. **சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத்தியவர் ..................**

அ) ச.த. சற்குணர் ஆ) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்

இ) மயிலை. சீனி. வேங்கடசாமி ஈ) விபுலானந்த அடிகள்

**விடை: ஆ) தெ.பொ.மீனாட்சி சுந்தரம்**

23. **மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய ...................... நூல், தமிழில் அம்மன்னனைப் பற்றி எழுதப்பட்ட முதல் நூலாகும்.**

அ) மகேந்திரவர்மன் ஆ) நரசிம்மவர்மன்

இ) மூன்றாம் நந்திவர்மன் ஈ) இராஜசிம்மன் **விடை: இ) மூன்றாம் நந்திவர்மன்**

**24.** **'தமிழ்நாட்டு வரலாறு' என்ற நூலில் தமிழ்மொழியுடன் எந்த மொழியை ஒப்பிட்டு மயிலையார் எழுதியுள்ளார்?**

அ) தெலுங்கு ஆ) கன்னடம்
இ) மலையாளம் ஈ) துளு
**விடை: ஈ) துளு**

**25.** **"விரிபெரு தமிழர் மேன்மை**
**ஓங்கிடச் செய்வ தொன்றே**
**உயிர்ப் பணியாகக் கொண்டோன்" என்று மயிலை சீனி. வேங்கடசாமியைப் பாராட்டியவர் ......**

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) விபுலானந்த அடிகள் ஈ) திரு.வி.கல்யாணசுந்தரனார்
**விடை: ஆ) பாரதிதாசன்**

**26.** **மயிலையார் எழுதிய சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு ...................... என்ற பெயரில் வெளியிடப்பட்டது.**

அ) அஞ்சிறைத் தும்பி ஆ) சாசன செய்யுள் மஞ்சரி
இ) தமிழ்நாட்டு வரலாறு ஈ) மறைந்து போன தமிழ் நூல்கள்
**விடை: அ) அஞ்சிறைத் தும்பி**

**27.** **'மத்தவிலாசம்' என்ற நூலை எழுதியவர் ...................... .**

அ) முதலாம் மகேந்திர வர்மன் ஆ) முதலாம் நரசிம்ம வர்மன்
இ) இராஜசிம்மன் ஈ) இரண்டாம் மகேந்திரவர்மன்
**விடை: அ) முதலாம் மகேந்திர வர்மன்**

**28.** **மயிலை சீனி.வேங்கடசாமி தனது சொல்லாய்வுக் கட்டுரைகளை எந்த இதழில் எழுதினார்?**

அ) குடியரசு ஆ) ஊழியன்
இ) ஆரம்பாசிரியன் ஈ) செந்தமிழ்ச் செல்வி
**விடை: ஈ) செந்தமிழ்ச் செல்வி**

**29.** **வரலாற்று ஆசிரியர்களின் மரபுகளை விடுத்து, புதிய கண்ணோட்டத்துடன் மயிலையார் எழுதிய நூல் .................. .**

அ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம் ஆ) பழங்காலத் தமிழர் வணிகம்
இ) கொங்கு நாட்டு வரலாறு ஈ) தமிழ் நாட்டு வரலாறு
**விடை: அ) களப்பிரர் ஆட்சியில் தமிழகம்**

## குறுவினா

**1.** **மயிலை சீனி.வேங்கடசாமி எந்தெந்த அறிஞர் பெருமக்களிடம் தொடர்பு கொண்டிருந்தார்?**

மயிலை சீனி. வேங்கடசாமி விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் தொடர்பு கொண்டிருந்தார்.

**2.** **எதிர்கால இலக்குகளை எவ்வாறு அடைய முடியும்?**

ஒவ்வொரு தேசிய இனமும் தன்னுடைய கடந்தகால வரலாற்றை அறிந்திருந்தால் மட்டுமே **எதிர்கால இலக்குகளை** அடைய முடியும்.

**3.** **மயிலையாரின் கலையியல் ஆய்வு நூல்களை எழுதுக.**

(i) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
(ii) இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம்
(iii) நுண்கலைகள்
(iv) இசைவாணர் கதைகள் முதலியன மயிலையாரின் கலையியல் ஆய்வு நூல்கள் ஆகும்.

**4.** **சிறுபாணன் சென்ற பெருவழி நிலப்படத்தை வரைந்தவர் யார்?**

பன்மொழிப் புலமை மிக்க **மயிலை சீனி.வேங்கடசாமி** அவர்களே சிறுபாணன் சென்ற **பெருவழி நிலப்படத்தை வரைந்தவர்** ஆவார்.


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
www.surabooks.com

**5. தாம் கெட நேர்ந்த போதும் தமிழ் கெடல் ஆற்றா அண்ணல் யார்? யார் கூற்று?**

தாம் கெட நேர்ந்த போதும் தமிழ் கெடல் ஆற்றா அண்ணல் மயிலை சீனி.வேங்கடசாமி ஆவார். இது பாவேந்தர் பாரதிதாசனின் கூற்றாகும்.

**6. மயிலையாரின் சொல்லாய்வுக் கட்டுரைகள் வெளிவந்த இதழின் பெயரையும் சொல்லாய்வுக் கட்டுரையின் பெயரையும் எழுதுக.**

மயிலையாரின் சொல்லாய்வுக் கட்டுரைகள் வெளிவந்த இதழ் 'செந்தமிழ்ச்செல்வி'. சொல்லாய்வுக் கட்டுரையின் பெயர் 'அஞ்சிறைத் தும்பி' என்பதாகும்.

**7. மயிலை சீனி.வேங்கடசாமியை விபுலானந்த அடிகள் எவ்வாறு புகழ்ந்துள்ளார்?**

'மயிலை சீனி.வேங்கடசாமி, ஆண்டில் இளைஞராக இருந்தாலும் ஆராய்ச்சித்துறையில் முதியவர் நல்லொழுக்கம் வாய்ந்தவர். நல்லோருடைய கூட்டுறவைப் பொன்னேபோல் போற்றுபவர்' என விபுலானந்த அடிகள் மயிலையாருக்கு புகழாரம் சூட்டுகின்றார்.

**8. மயிலையார் பெற்ற விருதுகளையும் சிறப்புகளையும் எழுதுக.**

(i) 1962-ல் தமிழ் எழுத்தாளர் சங்கம் அவரைப் பாராட்டிக் கேடயம் வழங்கியது.

(ii) மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப்பேரவைச்செம்மல்' என்ற விருதினை வழங்கியது.

(iii) அறிஞர்கள் ஒன்று கூடிச் சென்னை கோகலே மண்டபத்தில் மணிவிழா எடுத்து 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' என்ற பட்டத்தை வழங்கினர் .

**9. மறைந்து போன தமிழ் நூல்கள் எனும் நூலை எழுதியவர் யார்? இந்நூல் கூறும் கருத்து யாது?**

(i) மறைந்துபோன தமிழ் நூல்கள் என்னும் நூல் வேங்கடசாமி அவர்களின் அரிய ஆவணப் பணிகளில் ஒன்றாகும்.

(ii) இந்நூல் தமிழ் மறுமலர்ச்சிக்குப் பெரும் ஊக்கம் அளிப்பதாக அமைந்தது. இந்நூலில், பரந்த தமிழ் இலக்கிய, இலக்கணப் பரப்பில் உறைந்திருந்த செய்திகளைத் தொகுத்து மறைந்து போன 333 நூல்கள் தொடர்பான குறிப்புகளை நம்முன் நிறுத்துகிறார்.

**10. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய கிறித்துவமும் தமிழும் என்னும் நூல் எழுத தூண்டுகோலாக இருந்த நிகழ்வினைக் குறிப்பிடுக.**

1934-இல் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ச.த.சற்குணர், **கிறித்துவமும் தமிழும்** என்ற பொருள் குறித்து உரையாற்றினார். அவ்வுரையைக் கேட்டுப் பெற்ற ஆர்வத்தினால் கிறித்துவமும் தமிழும் என்னும் நூலை மயிலையார் எழுதினார்.

**11. சாசனச் செய்யுள் மஞ்சரி மறைந்து போன தமிழ் நூல்கள் ஆகிய நூல்கள் எழுதக் காரணமாக இருந்தது எது?**

தமிழியலுக்குத் தேவையான பல்வேறு ஆவணங்களையும் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை இவர் மேற்கொண்டார். இப்பணியின் விளைவாக, **சாசனச் செய்யுள் மஞ்சரி,** மறைந்து போன தமிழ் நூல்கள் ஆகிய நூல்கள் எழுதக் காரணமாக இருந்தன.

**12. தமிழர் பண்பாட்டிலும், வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்டவர் மயிலை சீனி.வேங்கடசாமி – நிறுவுக.**

(i) 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் '**இந்தியவியல்**' என்ற வட்டத்திற்குள் பேசப்பட்ட தமிழகத்தின் வரலாற்றை, அதிலிருந்து மீட்டுத் '**திராவிட இயலாக**' அடையாளப்படுத்தினார்.

(ii) அதன் பயனாக திராவிட இயல் '**தமிழியலாக**' வளர்ந்துள்ளது.

(iii) தமிழர் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் **உறுதியான பார்வையைக்** கொண்டிருந்தார்.

www.surabooks.com

**சிறுவினா**

**1. சீனி. வேங்கடசாமியின் இலக்கிய ஆய்வு நூல்களை எழுதுக.**

சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு , தமிழ்நாட்டு வரலாறு – சங்ககாலம் (அரசியல்), சாசனச்செய்யுள் மஞ்சரி, மறைந்துபோன தமிழ்நூல்கள், 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் போன்றவை சீனி.வேங்கடசாமி அவர்களின் இலக்கிய ஆய்வு நூல்கள் ஆகும்.

**2. சீனி. வேங்கடசாமியின் தொடக்ககால ஆய்வுகள் யாவை?**

(i) தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ச.த.சற்குணர் **கிறித்தவமும் தமிழும்** என்ற பொருள் குறித்து உரையாற்றியதைக் கேட்ட மயிலையார் கிறித்தவமும் தமிழும் என்ற நூலை எழுதினார்.

(ii) தமிழின் தொல் இலக்கியம், தொல்கலை, தொல்லெழுத்து ஆகியவற்றின் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக **'பௌத்தமும் தமிழும்' 'சமணமும் தமிழும்'** ஆகிய நூல்களை எழுதினார்.

(iii) சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளில் கவனம் செலுத்தினார்.

(iv) வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி ஆகியவற்றில் புலமை பெற்றிருந்ததால் சாசனங்களை அவரால் எளிதாகப் படிக்க முடிந்தது.

**3. 'தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம்' இக்கூற்றை ஆய்க.**

(i) **'தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம்'** எனக்கூறியவர் மயிலை சீனி. வேங்கடசாமி. மேலும், அவர் "எங்கள் வீட்டில் இராமாயணம், மகாபாரதம் போன்றவையும், ஏட்டுச் சுவடிகளும் நிறைய இருந்தன.

(ii) ஏட்டுச்சுவடிகளை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன்; எதுவும் புரியாது. பின்னால் இவற்றை எல்லாம் படித்து ஆராய வேண்டும் என்னும் எண்ணம் எழும்.

(iii) பின்னால் நான் செய்யப் புகுந்த இலக்கிய வரலாற்றுக் கல்வெட்டு ஆராய்ச்சிகளுக்கு அன்றே என் மனத்தில் வித்தூன்றிவிட்டேன்" என்று கூறுவார்.

**4. மயிலை சீனி. வேங்கடசாமியின் ஆய்வு அணுகுமுறைகள் குறித்து எழுதுக.**

(i) புதிய செய்தி தருதல், புது விளக்கமளித்தல், இருண்ட பக்கங்களுக்கு ஒளியூட்டுதல், தவறுகளை மறுத்து உண்மையை எடுத்துரைத்தல் ஆகியவை அவருடைய ஆய்வுகளில் இருந்தன.

(ii) 'பௌத்தமும் தமிழும்', **'சமணமும் தமிழும்'** ஆகிய நூல்களில் அச்சமயத்தார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகளை, காழ்ப்புணர்வின்றி நடுநிலையாக எழுதியுள்ளார்.

(iii) **வட்டெழுத்து, கோலெழுத்து, தமிழ் பிராம்மி** ஆகியவற்றில் புலமை பெற்றிருந்ததால் சாசனங்களை எளிதாகப் படித்து, அவர் கண்டறிந்த உண்மைகளை ஆய்வு நூல்களில் எழுதினார்.

(iv) தன்னுடைய வரலாற்று நூல்களில் வரலாற்றை மட்டும் எழுதாமல், அவற்றின் அரசியல், பண்பாடு மற்றும் கலை வரலாறுகளையும் பதிவு செய்தார்.

(v) இவரது ஆய்வு நூல்களில் வேண்டாத நூலிது என்றோ நூலில் வேண்டாத பகுதி என்றோ ஒதுக்க முடியாத வகையில் இவரது எழுத்தாளுமை இருந்தது.

**5. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்ற நூலின் முன்னுரையில் மயிலை சீனி.வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளவற்றை எழுதுக.**

(i) தற்காலத்துச் சமூகம் தனது பழைய அழகுக் கலைச் செல்வங்களை மறந்து, தன்னுடைய பெருமையை அறியாத சமூகமாக இருந்து வருகிறது.

(ii) **கலை** என்பது சினிமா மற்றும் இசையைப் பற்றி மட்டுமே குறிக்கிறது, **இலக்கியம்** பற்றி பேசப்படுவதில்லை.

(iii) **அழகுக் கலைகள்** குறித்து மக்கள் மறந்து விட்டதால் இந்நூல் எழுதப்பட்டது என்று **மயிலை சீனி.வேங்கடசாமி** குறிப்பிட்டுள்ளார்.

**6. ஆராய்ச்சி நூல்களை எழுதுவதைக் குறித்து மயிலையார் கூறுவன யாவை?**

"**நான் கதைகளையும், நவீனங்களையும்** எழுதுகிறவன் அல்லன். வரலாற்று ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நூல்களையும் எழுதுகிறவன். ஆராய்ச்சி நூல்களைப் பெரும்பான்மையோர் படிப்பதில்லை. இதை மிகச்சிறுபான்மையோரே படிக்கின்றனர் என்பதை நன்றாகத் தெரிந்தே ஆராய்ச்சி நூல்களை எழுதுகிறேன்." என்று வேங்கடசாமி ஆராய்ச்சி நூல்களை எழுதுவதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**7. மயிலை சீனி.வேங்கடசாமி வெளிப்படுத்திய அரிய செய்திகள் யாவை?**

(i) சேரன் கொடிக்கு வில், சோழன் கொடிக்கு புலி, பாண்டியன் கொடிக்கு மீன் என்று மரபான சின்னங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மற்ற சின்னங்கள் பற்றிய குறிப்புகள் ஆய்வுலகு அறியாதவை.

(ii) சங்க காலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் என்ற செய்தி அகநானூற்றில் (162) இருப்பதை முதன் முதலில் அறிந்து வெளிப்படுத்தியவர் மயிலை சீனி.வேங்கடசாமி. இப்படி அவர் வெளிப்படுத்திய அரிய செய்திகள் பற்பல.

**8. மயிலை சீனி வேங்கடசாமியை நாரண. துரைக்கண்ணன் புகழ்ந்து கூறியது யாது?**

"ஐந்தடிக்கு உட்பட்ட குறள் வடிவம்; அகன்ற நெற்றி; வட்ட முகம்; எடுப்பான மூக்கு; பேசத்துடிக்கும் மெல்லுதடுகள்; நான்கு முழ கதர்வேட்டி; காலர் இல்லாத முழுக்கைச் சட்டை; சட்டைப்பையில் மூக்குக் கண்ணாடி, பவுண்டன் பேனா; கழுத்தைச் சுற்றி மார்பின் இருபுறமும் தொங்கும் மேல்துண்டு; இடது கரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் புத்தகப் பை; அவர்தான் மயிலை சீனி.வேங்கடசாமி" – நாரண. துரைக்கண்ணன்

**9. மயிலை சீனி.வேங்கடசாமியைக் குறித்து பாவேந்தர் பாரதிதாசன் புகழ்ந்து எழுதிய கவிதை யாது?**

"தாங்கெட நேர்ந்த போதும்
தமிழ்கெட லாற்றா அண்ணல்
வேங்கடசாமி என்பேன்
விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப் பணியாகக் கொண்டோன்
வீங்கிட மாட்டான் கல்வி
விளம்பரம் விழைதல் இல்லான்" – பாவேந்தர் பாரதிதாசன்

☆ ☆ ☆

உயிரினும் ஓம்பப் படும் - மொழி, கலை

இயல் 1

# இளந்தமிழே!

- சிற்பி பாலசுப்பிரமணியம் **கவிதைப்பேழை**

## கரு

* தமிழ் மொழி நம் அடையாளம்.
* தோன்றிய காலந்தொட்டு இன்னும் உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது நம் தமிழே !
* எட்டுத்திக்கும் புகழ் பரப்பும் உன்னத மொழி தமிழே !
* தமிழின் பெருமையை பாடாத மரபுக்கவிஞர்கள் இல்லை. தமிழ்மொழி தன்னை புதுப்பித்துக் கொண்டு பழமையான சிறப்பையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது கவிஞர்கள் ஆசை.
* மூன்று சங்கங்களில் அரியணையில் அமர்ந்து கொடை வள்ளல்களை ஈந்துள்ள தமிழை அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு இன்னிசைபாடி அழைப்பதாக கவிஞரின் பாடல் அமைந்துள்ளது.

## ஆசிரியர் குறிப்பு



**பெயர்** : பாலசுப்பிரமணியம்

**புனைப் பெயர்**: சிற்பி

**பெற்றோர்** : பொன்னுசாமி - கண்டியம்மாள்

**பிறந்த ஊர்** : ஆத்துப் பொள்ளாச்சி (கோயம்புத்தூர் மாவட்டம்)

**பிறப்பு** : 1936, ஜூலை 29

**பணி** : முதலில் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளர். இரண்டாவதாக கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.

**படைப்புகள்** : **கவிதை நூல்கள்** ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி, மௌன மயக்கங்கள், நீலக்குருவி போன்றவை. மேலும் கவிதைநாடகம், சிறுவர் நூல்கள், புதினங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் போன்றவற்றைப் படைத்துள்ளார்.

**சிறப்பு** : கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் என்று பன்முகச் சிறப்பு கொண்டவர்.சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக உள்ளார். இருமுறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.

**விருதுகள்** : சாகித்திய அகாதெமி விருது (2001-ஆம் ஆண்டு, அக்னி சாட்சி - மொழிபெயர்ப்பு நூல்)
சாகித்திய அகாதெமி விருது (2002-ஆம் ஆண்டு, ஒரு கிராமத்து நதி - கவிதை நூல்)
தமிழக அரசு விருது (1982-ஆம் ஆண்டு, மௌன மயக்கங்கள் - கவிதை நூல்)
தமிழக அரசு விருது (1998-ஆம் ஆண்டு, பூஜ்யங்களின் சங்கிலி - கவிதை நூல்)
தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது (2009-ஆம் ஆண்டு, சிறந்த படைப்பாளி) இவை தவிர்த்து மேலும் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

**அறக்கட்டளை** : 1996-இல் இவரால் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் தலைசிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது.

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள்** : ஆங்கிலம், கன்னடம், மலையாளம், இந்தி, மராத்தி

## பாடப்பகுதி

சிற்பி பாலசுப்பிரமணியத்தின் **நிலவுப்பூ** என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு கவிதை பாடப்பகுதியாக அமைந்துள்ளது.



**பாடல்**

## இளந்தமிழே!

**செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!**
**தம்கைகள் அதனைப்போல் சிவந்து நோகத்**
**தாமுழைக்கும் தொழிலாளர் வியர்வை வெள்ளம்**
**விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய்**
**வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட**
**எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால்**
**ஏற்றதுணை வேறுண்டோ? இயம்பி டாயே!**

**சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| செம்பரிதி | – செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் (அல்லது) சூரியன் |
| மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் | – உயர்ந்த மலையின் பின்சென்று மறைவான் |
| வானமெல்லாம் | – ஆகாயம் எங்கும் |
| செந்நிறத்துப் பூக்காடாம் | – சிவந்த நிறமுடைய பூக்கள் அடர்ந்து பரவிக் கிடக்கும் |
| தம்கைகள் அதனைப்போல் சிவந்து | – செந்நிறப் பூக்கள் செறிந்துள்ள காட்சியைப் போல சிவப்பாகும் அளவிற்கு |
| நோகத் தாம் உழைக்கும் தொழிலாளர் | – கடினமாக உழைக்கும் தொழிலாளிகளின் |
| விம்முகின்ற தோள்மீதில் | – பருத்துள்ள தோள்களின் மேல் |
| வியர்வை வெள்ளம் | – அதிகளவிலான வியர்வைத் துளிகள் |
| முத்து முத்தாய் வீற்றிருக்கும் | – முத்துகள் போல இருக்கும் |
| எம் அருமைச் செந்தமிழே | – எங்களது அருமையான செந்தமிழ் மொழியே |
| அவையெல்லாம் வியந்துபாட | – அவற்றையெல்லாம் புகழ்ந்து பாடுவதற்கு |
| உன்னை அல்லால் | – உன்னைத் தவிர |
| ஏற்ற துணை வேறு உண்டோ | – பொருத்தமான வேறு துணை உண்டோ |
| இயம்பிடாயே | – கூறுவாயாக |

**பொருளுரை**

செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைப் பொழுதில் உயர்ந்த மலைகளின் பின்சென்று மறைவான். அப்போது ஆகாயம் எங்கும் செந்நிறப் பூக்களை அடர்த்தியாக தூவியது போன்று காட்சியளிக்கும். அதைப்போல, தம் கைகள் சிவந்து போகும் அளவிற்கு கடினமாக உழைக்கும் தொழிலாளிகளின் பருத்து விளங்கும் தோள்களின் மீது வியர்வைத் துளிகள் முத்து முத்தாகக் காணப்படும். இவற்றையெல்லாம் புகழ்ந்து பாடுவதற்கு செந்தமிழே உன்னைத் தவிர பொருத்தமான வேறு துணை உண்டோ? கூறுவாயாக.

**விரிவான விளக்கம்**

மாலைப் பொழுதில் சூரியன் மறையும் நேரத்தில் வானம் சிவந்து காணப்படுவது இயற்கையான ஒரு நிகழ்வு. அக்காட்சியானது சிவந்த பூக்களை சிதறிவிட்டது போல் காணப்படுகிறது என்று ஆசிரியர் உவமைநயத்துடன் கூறியுள்ளார். வானம் சிவந்திருப்பதை தொழிலாளியின் சிவந்த கைகளுக்கு ஒப்புமைப்படுத்தியுள்ளார். தொழிலாளியின் தோள்மீது வியர்வை முத்துமுத்தாய் காணப்படுவதை 'வியர்வை வெள்ளம்' என்று உருவகப்படுத்தியுள்ளார். மேற்கண்ட காட்சிகளை எல்லாம் புகழ்ந்து உரைப்பதற்கு தமிழ்மொழியைத் தவிர, வேறு மொழிகள் தனக்குப் பயன்படாது என்பதை குறிப்பால் உணர்த்தியுள்ளார். உவமைநயம், உருவகம் போன்றவற்றை அமைத்துப் பாடுவதற்கு செந்தமிழ் மொழியே தனக்கு துணையாகும் என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

**பாடல்**

**மூண்டுவரும் கவிதைவெறிக் குணவாய் எங்கள்**
**முத்தமிழே! நீயுள்ளாய்; முன்னம் ஓர்நாள்**
**பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!**
**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!**

**மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**
**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!**
**கூண்டதனை உடைத்தெழுந்த சிங்கம் போலக்**
**குளிர்பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா!**

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| மூண்டுவரும் கவிதை வெறிக்கு உணவாய் | – உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய் |
| எங்கள் முத்தமிழே நீயுள்ளாய் | – இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழாக நீ இருக்கின்றாய் |
| பாண்டியரின் சங்கத்தில் | – பாண்டிய மன்னர்களின் தமிழ்ச் சங்கத்தின் |
| கொலுவிருந்து | – அரியணையில் அமர்ந்திருந்தாய் |
| பாரி முதல் வள்ளல்களை | – பாரி முதலான கொடை வள்ளல்கள் பலரை |
| ஈன்று தந்தாய் | – உன் புதல்வர்களாகப் பெற்றுக் கொடுத்துள்ளாய் |
| மீண்டும் அந்தப் பழமை நலம் | – அத்தகைய பொற்காலம் மீண்டும் |
| புதுக்குதற்கு மெய்சிலிர்க்க | – அமைவதற்கு உடல்சிலிர்க்க |
| தமிழ்க்குயிலே கூவி வா, வா! | – தமிழாகிய குயிலே இன்னிசை எழுப்பி வருவாயாக |
| கூண்டு அதனை உடைத்து எழுந்த | – தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை உடைத்துவிட்டு வெளியே வரும் |
| சிங்கம் போல | – சிங்கத்தைப் போன்று |
| குளிர்பொதிகை | – குளிர்ச்சியான பொதிகை மலையைப் போன்ற |
| தென்தமிழே சீறி வா, வா | – தென்னகத்தின் தமிழ்மொழியே, வீரத்துடன் வருவாயாக. |

## பொருளுரை

முத்தமிழே! எங்கள் உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய். பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச்சங்கத்தின் அரியணையில் வீற்றிருந்தாய். பாரி முதலான வள்ளல்கள் பலரைப் பெற்றுத் தந்துள்ளாய்! ஈகைக் குணம் நிறைந்திருந்த மாந்தர்கள் வாழ்ந்திருந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு எங்கள் உடல் சிலிர்க்கும்படியாக தமிழாகிய குயிலே இன்னிசை பாடி வருவாயாக! தென்னகத்தின் குளிர்ச்சி பொருந்திய தமிழே, சிங்கமானது கூண்டை உடைத்துக் கொண்டு வீரத்துடன் வெளியே வருவது போல வருவாயாக!

## விரிவான விளக்கம்

'கவிதை வெறிக்கு உணவாய்' என்ற தொடரில் உணவு என்பதை உயிர் எனக் கொள்ள வேண்டும். ஒரு கவிதை பொருளற்று இருந்தால் அதற்கு மதிப்பில்லை. ஒருவரின் உயிரைக் காப்பது உணவு. கவிதை ஆற்றலை வெளிப்படுத்தும் போது அதில் **உயிர்ப்பு** இருக்க வேண்டும் என்பதால் 'உணவாய்' என்று ஆசிரியர் கூறியுள்ளார்.

முதல் ஏழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் போன்று எண்ணற்ற வள்ளல்களுக்கு தாயாக விளங்கிய தமிழே, குயிலின் இன்னிசை போல நீ பாடி வரும் போது மீண்டும் அந்தத் தொன்மையான காலம் தோன்ற வேண்டும்.

குளிர்ச்சியான பொதிகை மலையில் (குற்றால மலை) தோன்றிய தென் தமிழே, கூண்டை உடைத்துக் கொண்டு சிங்கம் வீரத்துடன் வெளியே வருவது போல, உன் வளர்ச்சிக்கு தடைகளாய் அமைந்தவற்றை எல்லாம் தகர்த்து எறிந்து விட்டு வருவாயாக!

### அருஞ்சொற்பொருள்

| | |
|---|---|
| பரிதி – சூரியன் | ஏற்ற துணை – பொருத்தமான துணை |
| விம்முகின்ற தோள் – பருத்திருக்கின்ற தோள் (பெரிய தோள்கள்) | இயம்புதல் – கூறுதல் |
| மூண்டு வரும் – பொங்கிப் பெருகி வரும் | ஈன்று – பெற்று |
| கொலுவிருத்தல் – அரியணையில் வீற்றிருத்தல் | வியந்து – புகழ்ந்து |

www.surabooks.com

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| செம்பரிதி, செந்நிறம், செந்தமிழ், முத்தமிழ் | பண்புத்தொகைகள் |
| வியர்வை வெள்ளம், பூக்காடு, தமிழ்க்குயில் | உருவகங்கள் முதல் தி.தேர்வு 2022 & 2024 |
| சிவந்து, வியந்து, ஈன்று, சீறி, உடைத்து | வினையெச்சங்கள் |
| முத்து முத்தாய் | அடுக்குத்தொடர் காலாண்டுத் தேர்வு 2019 |
| விம்முகின்ற, எழுந்த | பெயரெச்சம் |
| குளிர்பொதிகை | வினைத்தொகை |

## பகுபத உறுப்பிலக்கணம்

| | |
|---|---|
| **சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்** ஜூலை 2022 காலாண்டுத் தேர்வு 2023<br>சாய் – பகுதி<br>ப் – சந்தி<br>ப் – எதிர்கால இடைநிலை<br>ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி | **வியந்து – விய + த்(ந்) + த் + உ** பிடிஏ–3<br>விய – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |
| **விம்முகின்ற – விம்மு + கின்று + அ** காலாண்டுத் தேர்வு 2019<br>விம்மு – பகுதி<br>கின்று – நிகழ்கால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி | **இருந்தாய் – இரு + த் (ந்) + த் + ஆய்**<br>இரு – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |
| **ஈன்று – ஈன் + ற் + உ**<br>ஈன் – பகுதி<br>ற் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி | **உடைத்து – உடை + த் + த் + உ**<br>உடை – பகுதி<br>த் – சந்தி<br>த் – இறந்தகால இடைநிலை<br>உ – வினையெச்ச விகுதி |
| **தந்தாய் – தா(த) + த்(ந்) + த் + ஆய்**<br>தா – பகுதி 'த' எனக் குறுகியது விகாரம்<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | **எழுந்த – எழு + த்(ந்) + த் + அ**<br>எழு – பகுதி<br>த் – சந்தி 'ந்' ஆனது விகாரம்<br>த் – இறந்தகால இடைநிலை<br>அ – பெயரெச்ச விகுதி |

## புணர்ச்சி விதி

1. **செம்பரிதி** – செம்மை + பரிதி — பண்புப்பெயர் புணர்ச்சி அரையாண்டுத் தேர்வு 2019, ஆக. 2021

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| ஈறு போதல் | செம்~~மை~~ + பரிதி – செம் + பரிதி – செம்பரிதி |

2. **வானமெல்லாம்** – வானம் + எல்லாம் — மெய்யீற்றுப் புணர்ச்சி பிடிஏ–4; செப். 2020; ஜூலை 2022; ஜூன் 2023

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | வானம் + எல்லாம்(ம் + எ = மெ)<br>வானமெல்லாம் என்றானது. |

**கூடுதல் சான்று : தாமுழைக்கும்** – தாம் + உழைக்கும்

3. **உன்னையல்லால் -** உன்னை + அல்லால் **உடம்படுமெய்ப் புணர்ச்சி**

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. இ ஈ ஐ வழி யவ்வும் | உன்னை + ய் + அல்லால் |
| 2. உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே | உன்னை + (ய் +அ) ல்லால் (ய் + அ = ய) உன்னையல்லால் என்றானது. |

**கூடுதல் சான்றுகள் :**

அவையெல்லாம் – அவை + எல்லாம்

**விதி 1 –** அவை + ய் + எல்லாம் **விதி 2 –** அவையெல்லாம்

நீயுள்ளாய் – நீ + உள்ளாய்

**விதி 1 –** நீ+ ய் + உள்ளாய் **விதி 2 –** நீயுள்ளாய்

கொலுவிருந்தாய் – கொலு + இருந்தாய்

**விதி 1 –** கொலு+ வ் +இருந்தாய் **விதி 2 –** கொலுவிருந்தாய்

4. **செந்தமிழே -** செம்மை + தமிழே **பண்புப்பெயர் புணர்ச்சி** மார்ச் 2020; ஜூன் 2024

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. ஈறு போதல் | செம்~~மை~~ + தமிழே = செம் + தமிழே |
| 2. முன்னின்ற மெய் திரிதல் | செம் + தமிழே (~~ம்~~ – ந் + தமிழே) = செந்தமிழே |

**கூடுதல் சான்று : செந்நிறம்** – செம்மை + நிறம்

5. **வீற்றிருக்கும் -** வீற்று + இருக்கும் **குற்றியலுகரப் புணர்ச்சி**

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் | வீற்ற் + இருக்கும் – வீற்(ற்+இ) ருக்கும் (ற் + இ = றி) |
| 2. உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே | வீற்றிருக்கும் |

**கூடுதல் சான்றுகள் :**

**வேறுண்டோ** – வேறு + உண்டோ

**விதி 1 –** வேற்ற் + உண்டோ **விதி 2 –** வேறுண்டோ

**வெறிக்குணவாய்** – வெறிக்கு + உணவாய்

**விதி 1 –** வெறிக்க் + உணவாய் **விதி 2 –** வெறிக்குணவாய்

**கூண்டதனை –** கூண்டு + அதனை

**விதி 1 –** கூண்ட் + அதனை **விதி 2 –** கூண்டதனை

**உடைத்தெழுந்த –** உடைத்து + எழுந்த

**விதி 1 –** உடைத்த் + எழுந்த **விதி 2 –** உடைத்தெழுந்த

6. **முத்தமிழ் -** மூன்று + தமிழ் **எண்ணுப்பெயர் புணர்ச்சி**

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| 1. மூன்று ஆறு ஏழ் குறுகும் | முன்று + தமிழ் |
| 2. ஈறு உயிர்மெய்யும் ஏகும் | முன் + தமிழ் |
| 3. மூன்றன் உறுப்பு அழிவும் வந்ததும் ஆகும் | முத் + தமிழ் – முத்தமிழ் |

7. **தமிழ்க்குயில் –** தமிழ் + குயில் **இயல்பீறு புணர்ச்சி**

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் | தமிழ் + குயில்<br>தமிழ் + க் + குயில் – தமிழ்க்குயில் |

8. **தென்தமிழே –** தெற்கு + தமிழே **திசைப்பெயர் புணர்ச்சி**

| புணர்ச்சி விதி | சொல் மாற்றம் |
|---|---|
| திசையொடு திசையும் பிறவும் சேரின் நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும் | தெற் + தமிழே |
| றகரம் னலவாகத் திரிதலும் ஆம்பிற | தெற்கு+ தமிழே – தென் தமிழே |

## கற்பவை கற்றபின்

**தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா.

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே! இன்றைய கலந்துரையாடலில் எந்தப் பொருள் குறித்து உரையாடப் போகிறீர்கள்?

**மாணவர்கள்** : ஐயா! நமது பாடப்புத்தகங்களில் முதலில் நாட்டுப்பண் அடுத்து தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெற்றுள்ளன. அது குறித்து இன்று உரையாடலாம் என முடிவு செய்துள்ளோம்.

**ஆசிரியர்** : மிகவும் நன்று! எந்த ஒரு காரியத்தையும் வெற்றிகரமாக முடிப்பதற்கு இறையருளை வேண்டுவது தமிழரின் மரபாகும்.

**கயல்விழி** : ஆம் ஐயா! அதனால்தான் திருக்குறளில் முதலில் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

**இளங்குமரன்** : அப்படியென்றால் பாடப்புத்தகத்தில் முதலில் நாட்டுப்பண்தானே அமைந்துள்ளது. இறைவாழ்த்து வரவில்லையே!

**ஆசிரியர்** : நமது இந்தியா மதசார்பற்ற நாடு. அதனால்தான் தேசத்தை முதன்மைப்படுத்தி நாட்டுப்பண்ணும், நமது மொழி வாழ்த்துப் பாடல் இரண்டாவதாகவும் அமைந்துள்ளன.

**தமிழ்ச் செல்வன்** : ஒவ்வொருவரும் தன் தாய்மொழி மீது மிகுந்த பற்றுடன் இருக்க வேண்டும். தாய்மொழி நமது உயிருக்கு நிகரானது. நம் தாய்மொழியின் தொன்மை, சிறப்பு, பெருமைகள் போன்ற யாவற்றையும் அறிந்தவரால்தான் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்க முடியும்.

**ஆசிரியர்** : மிக நன்றாகக் கூறினாய்! மகாத்மா காந்தியடிகள் தன் தாய்மொழி மீது மிகுந்த பற்றுடையவர். தாய்மொழியில் கற்பதே சிறந்தது என்றும் கூறியுள்ளார். தாய்மொழிப் பற்று இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் பாடநூல்களில் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுகின்றது.

**கயல்விழி** : மொழி வாழ்த்துப் பாடலின் மூலமாக நமது மொழியின் சிறப்புகளையும் காலம் கடந்து அழியாமல் நிற்கின்ற அதன் நிலைப்புத் தன்மையையும் அறிய முடிகிறது.

**இளங்குமரன்** : அதனால்தான், தான் காணும் காட்சிகளைப் புகழ்ந்துபாட தமிழ் மொழியைத் தவிர ஏற்ற துணை வேறில்லை என்று சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறியுள்ளார்.

**ஆசிரியர்** : நன்று! நன்று! தமிழ்மொழிப் பாடத்தில் மொழிவாழ்த்துப் பாடல் இடம் பெறுவதன் நோக்கத்தை இப்போது நன்கு அறிந்திருப்பீர்கள் எனக் கருதுகிறேன்.

**மாணவர்கள்** : ஆம் ஐயா! தமிழ் மொழியின் தன்னிகரில்லாத சிறப்புகளை எடுத்துக் கூறும் மொழி வாழ்த்துப் பாடல் இடம் பெறுவது பெருமைக்கு உரியது. தாய்மொழியை வணங்குவோம்! அதன் பெருமைகளை தரணியெங்கும் எடுத்துச் செல்வோம்! நன்றி ஐயா!

**ஆசிரியர்** : நன்றி மாணவர்களே!

## நம்மை அளப்போம் (புத்தக வினா)

**பலவுள் தெரிக.**

**2.** **''மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு'' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம் என்பது,**
ஜூன் 2023; அரை.தேர்வு 2023

1) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது 2) பொதிகையில் தோன்றியது 3) வள்ளல்களைத் தந்தது

அ) 1 மட்டும் சரி ஆ) 1, 2 இரண்டும் சரி

இ) 3 மட்டும் சரி ஈ) 1, 3 இரண்டும் சரி **விடை: ஈ) 1, 3 இரண்டும் சரி**

**3.** **"செம்பரிதி ..." எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு**

அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) சர்ப்பயாகம் ஈ) சூரியநிழல் **விடை: ஆ) நிலவுப்பூ**

**குறுவினா**

**3.** **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**
அ.மா.வி 2019; மார்ச் 2020; ஆக. 2021; முதல் தி.தேர்வு & ஜூலை 2022; ஜூன் 2023 & 2024

(i) கடினமான வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களின் கைகள், மாலை நேரத்தில் சூரியனின் செந்நிறக் கதிர்களால் சிவந்திருக்கிற வானத்தைப் போல் சிவந்து காணப்படும்.

(ii) தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் பருத்த தோள் மீது முத்துகள் சிதறியது போன்று காணப்படும். இவற்றையெல்லாம் வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்று கவிஞர் சிற்பி கூறுகிறார்.

**சிறுவினா**

**2.** **'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.** அரை.தேர்வு 2019, 2024; ஜூன் 2023; காலாண்டுத் தேர்வு 2023

(i) மாலைநேரத்தில் செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மலையுச்சியின் மீது சென்று மறையும் காட்சியானது, கதிரவன் தன் தலையைச் சாய்த்து உறங்குவது போல் உள்ளது.

(ii) கதிரவன் மறைகின்ற மாலை நேரத்தில் வானம் முழுவதும் சிவந்த நிறத்தில் காணப்படும். அக்காட்சியானது, வானத்தில் செந்நிறப்பூக்கள் செறிந்து, பூக்காடு போல் காட்சியளிக்கிறது.

**4.** **பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>– நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பிரமணியம் |

**விடை:**

| | |
|---|---|
| கால மாற்றத்தால் நாம் புதிய சொற்களைக் கண்டறிகிறோம். அவற்றிற்கான பொருள்களையும் அவற்றை நம் மொழிக்கும் பண்பாட்டிற்கும் ஏற்றவாறு திருத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை உணர்த்தும் வரிகள்தான் இவை. | முத்தமிழைப் பாண்டியர்கள் சங்கம் வைத்து வளர்த்தனர். நம் சிந்தனை அத்தமிழின் பழமையை மறவாமல் பண்பாட்டைப் புதுப்பிக்கும் சிந்தனையாக இருக்க வேண்டும். பழமைகளைப் புதுப்பித்துப் போற்ற வேண்டும் என்று சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுகிறார். |

www.surabooks.com

**நெடுவினா**

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.** ஆக. 2021; முதல் தி.தேர்வு & மே 2022; அரையாண்டுத் தேர்வு 2023; ஜுன் 2024

| குறிப்புச் சட்டகம் |
|---|
| முன்னுரை |
| கவிஞர்களுக்குத் துணையாய் விளங்கும் தமிழ் |
| தமிழின் பெருமைகள் |
| தமிழ்த்தாயே வருக! |
| முடிவுரை |

**முன்னுரை:**

இவ்வுலகில் எத்தனையோ மொழிகள் தோன்றின. அவற்றுள் பல அழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழ்மொழி பல ஊழிக்காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கிறது. அத்தகு பெருமைமிக்க தமிழ் மொழியினை, அதன் பெருமையைப் பேசாத கவிஞர்கள் இல்லை எனக் கூறலாம். கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழின் பெருமைகளாகக் கூறியவற்றை இங்குக் காண்போம்.

**கவிஞர்களுக்குத் துணையாய் விளங்கும் தமிழ் :**

செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைநேரத்தில் மலையின் உச்சியில் சென்று மறைகின்ற காட்சியானது, செந்நிறப் பூக்காடு ஆகாயம் முழுமையும் நிறைந்திருப்பது போல் உள்ளது. உழைத்துச் சிவந்த தொழிலாளர்களின் கைகள், சிவந்த நிறமுடைய மாலை நேரத்து வானம் போல் உள்ளது.

தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது பூத்திருக்கும் வியர்வைத்துளிகள் முத்துக்கள் போன்று உள்ளன. இக்காட்சிகளை எல்லாம் வியந்து பாடுவதற்கு செந்தமிழாகிய உன்னைவிட்டால் வேறு பொருத்தமான துணை உண்டோ? கூறிடுவாயாக! எனக் கேட்கிறார் கவிஞர்.

**தமிழின் பெருமைகள் :**

கவிஞர்களின் உள்ளத்திலே பொங்கிப் பெருகி வரும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக விளங்கும் முத்தமிழே! தொன்மைக் காலத்தில் பாண்டியரின் சங்கத்தில் அரசியாக, அரியணையில் வீற்றிருந்தாய்! பாரி முதலான வள்ளல்கள் பலரை இவ்வுலகிற்கு அளித்து அறம் வளர்த்தாய்!

**தமிழ்த்தாயே வருக!:**

மீண்டும் அந்தப் பொற்காலம் அமைவதற்கு தமிழ்க்குயிலாக மாறி மெய்சிலிர்க்க இன்னிசை பாடி வருக! தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளியே வரும் சிங்கம் போன்று உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை உடைத்து எறிந்து விட்டு, பொதிகை மலையில் வளர்ந்த தென்தமிழே வருக!

**முடிவுரை:**

கால மாற்றங்களுக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்வதுடன், தன்னுடைய பழம் பெருமைகளையும் இழந்துவிடாமல் தமிழ் மொழி தரணியெங்கும் புகழ்மணம் வீச வேண்டும் என்பதைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்** பிடிஏ–4

அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி
இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

விடை: **ஆ) ஒரு கிராமத்து நதி**

**2. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?** பிடிஏ–6

அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி

விடை: **அ) பாடி**



www.surabooks.com

3. **சிற்பி பாலசுப்பிரமணியம் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ........ துறைத் தலைவராகப் பணியாற்றினார்.** கா.தேர்வு 2019

அ) தமிழ் ஆ) வரலாறு இ) ஆங்கிலம் ஈ) பொருளாதாரம் **விடை: அ) தமிழ்**

4. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் :** மார்ச் 2020

அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம்

**விடை: ஆ) நிலவுப் பூ**

5. **"மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு"**
**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா! என்று கூறியவர் ...............** முதல் தி.தேர்வு 2022

அ) பரலி சு. நெல்லையப்பர் ஆ) தி.சு. நடராசன்
இ) சிற்பி பாலசுப்ரமணியம் ஈ) ராஜ நாராயணன் **விடை: இ) சிற்பி பாலசுப்ரமணியம்**

6. **"தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர் :** மே 2022

அ) சிற்பி பாலசுப்ரமணியம் ஆ) பாரதியார்
இ) சுரதா ஈ) பாரதிதாசன் **விடை: அ) சிற்பி பாலசுப்ரமணியம்**

## குறுவினா

1. **"முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" - யார், யாரைப் பற்றி கூறியது?** பிடிஏ–5

சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்தாயைப் பற்றிக்கூறியது.

## சிறுவினா

1. **சிற்பி பாலசுப்பிரமணியம் - குறிப்பு வரைக.** பிடிஏ–1

**ஆற்றியபணி** : பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர்.

**ஆற்றுகின்ற பணி** : சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினர்.

**சிறப்பு** : கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்.

**விருது** : 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலிற்காகவும் மொழிபெயர்ப்பு நூல் ஒன்றிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்.

**படைப்புகள்** : **கவிதை நூல்கள் -** நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரியநிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலியவை. **உரைநடை நூல்கள் -** இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும். **மொழிபெயர்ப்பு நூல்கள்-** மலையாளக் கவிதைகள் மற்றும் புதினங்களை மொழிபெயர்த்துள்ளார்.

**இவருடைய கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :**

ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி.

2. **'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என்று சிற்பி கூறுவதன் பொருள் யாது?** மார்ச் 2023

(i) 'பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்' என சிற்பி முத்தமிழை பற்றி கூறுகிறார்.
(ii) முத்தமிழே! எங்கள் உள்ளத்தில் பொங்கிப் பெருகும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக இருக்கின்றாய்.
(iii) பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச்சங்கத்தின் அரியணையில் வீற்றிருந்தாய்.
(iv) பாரி முதலான வள்ளல்கள் பலரைப் பெற்றுத் தந்துள்ளாய்!
(v) ஈகைக் குணம் நிறைந்திருந்த மாந்தர்கள் வாழ்ந்திருந்த அந்தப் பொற்காலம் மீண்டும் அமைவதற்கு எங்கள் உடல் சிலிர்க்கும்படியாக தமிழாகிய குயிலே இன்னிசை பாடி வருவாயாக! என்று அழைக்கிறார்.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

**1. சிற்பி பாலசுப்பிரமணியம் என்பவர் ........**

(i) கவிஞர் (ii) பேராசிரியர் (iii) மொழிபெயர்ப்பாளர் (iv) இதழாசிரியர்

அ) (i) மட்டும் (ii) சரியானவை
ஆ) (i) மட்டும் (iii) சரியானவை
இ) (iii) மட்டும் (iv) சரியானவை
ஈ) அனைத்தும் சரியானவை

**விடை: ஈ) அனைத்தும் சரியானவை**

**2. சிற்பி பாலசுப்பிரமணியம் ......... பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார்.**

அ) சென்னை ஆ) பாரதியார் இ) காமராஜர் ஈ) தஞ்சை **விடை: ஆ) பாரதியார்**

**3. சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றுள்ளார்?**

அ) ஒரு முறை
ஆ) இரண்டு முறை
இ) மூன்று முறை
ஈ) நான்கு முறை

**விடை: ஆ) இரண்டு முறை**

**4. "எம்மருமைச் செந்தமிழே! உன்னை யல்லால் ஏற்றதுணை வேறுண்டோ" என்ற அடிகள் இடம்பெற்றுள்ள கவிதை நூல்**

அ) பூஜ்யங்களின் சங்கிலி
ஆ) ஒளிப்பறவை
இ) நிலவுப் பூ
ஈ) சர்ப்பயாகம்

**விடை: இ) நிலவுப் பூ**

**5. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'அலையும் சுவடும்' என்பது ......... நூலாகும்.**

அ) கவிதை ஆ) மொழிபெயர்ப்பு இ) உரைநடை ஈ) புதினம் **விடை: இ) உரைநடை**

**6. கருத்து 1: செந்நிறப் பூக்கள் செறிந்திருந்த வானம் போல் தொழிலாளர்களின் கை சிவந்திருந்தது.**
**கருத்து 2: தொழிலாளர்களின் முகத்தின் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.**

அ) 1 மட்டும் சரி
ஆ) 2 மட்டும் சரி
இ) 1 மற்றும் 2 சரியானவை
ஈ) 1 மற்றும் 2 தவறானவை

**விடை: அ) 1 மட்டும் சரி**

**சரியான கருத்து:** தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது வியர்வை வெள்ளம் முத்து முத்தாக இருந்தது.

**7. செம்பரிதி ......... தலையைச் சாய்ப்பான்.**

அ) வெண்மேகத்தில்
ஆ) மலைமேட்டில்
இ) கடலில்
ஈ) கருமேகத்தில்

**விடை: ஆ) மலைமேட்டில்**

**8. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) செந்தமிழ் | - | 1. குளிர் பொதிகை |
| ஆ) முத்தமிழ் | - | 2. பழமை நலம் |
| இ) தமிழ்க்குயில் | - | 3. மூண்டுவரும் கவிதை |
| ஈ) தென் தமிழ் | - | 4. ஏற்ற துணை |

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4 இ) 2, 3, 1, 4 ஈ) 4, 1, 3, 2 **விடை: அ) 4, 3, 2, 1**

**9. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) செம்பரிதி | - | 1. உருவகம் |
| ஆ) வியர்வை வெள்ளம் | - | 2. பண்புத்தொகை |
| இ) சிவந்து | - | 3. பெயரெச்சம் |
| ஈ) எழுந்த | - | 4. வினையெச்சம் |

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 1, 3, 2

**விடை: அ) 2, 1, 4, 3**


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

10. வானமெல்லாம் நிறைந்திருந்த பூக்காட்டின் நிறம் ......... .
அ) வெண்மை ஆ) மஞ்சள் இ) சிவப்பு ஈ) நீலம் **விடை: இ) சிவப்பு**

11. செம்பரிதி என்பது ......... விதி ஆகும்.
அ) உடம்படுமெய் புணர்ச்சி ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி
இ) பண்புப்பெயர் புணர்ச்சி ஈ) இயல்பீறு புணர்ச்சி **விடை: இ) பண்புப்பெயர் புணர்ச்சி**

12. விம்மு + கின்று + அ என்பதில் 'கின்று' என்பது ......... .
அ) இறந்தகால இடைநிலை ஆ) நிகழ்கால இடைநிலை
இ) எதிர்கால இடைநிலை ஈ) எதிர்மறை இடைநிலை
**விடை: ஆ) நிகழ்கால இடைநிலை**

13. "விம்மு கின்ற தோள்மீதில் முத்துமுத்தாய் வீற்றிருக்கும்" இவ்வடியில் பயின்று வந்துள்ள அணி .......
அ) உவமை அணி ஆ) உருவக அணி
இ) எடுத்துக் காட்டு உவமை அணி ஈ) உயர்வு நவிற்சி அணி **விடை: ஆ) உருவக அணி**

14. நமது அடையாளமாகவும், பண்பாட்டின் நீட்சியாகவும் விளங்குவது ..............................
அ) தமிழ் மாநிலம் ஆ) இந்திய நாடு
இ) தமிழர் நாகரிகம் ஈ) தமிழ்மொழி **விடை: ஈ) தமிழ்மொழி**

15. ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல் என்ற விதிகளின் படிப் புணரும் சொல் .......
அ) உன்னையல்லால் ஆ) வானமெல்லாம்
இ) செந்தமிழே ஈ) செம்பரிதி **விடை: இ) செந்தமிழே**

16. வியந்து - இச்சொல்லைப் பகுக்கும் முறை ...........
அ) விய + த் + து ஆ) வியந்த + உ
இ) விய + த் + ந் + உ ஈ) விய +த்(ந்) + த் + உ **விடை: ஈ) விய + த்(ந்) + த் + உ**

17. பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!
பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்! - இவ்வடியில் இடம்பெற்ற நயம் -
அ) அடிமோனை, அடி இயைபு ஆ) அடி எதுகை, சீர் மோனை
இ) சீர்மோனை, சீர் இயைபு ஈ) சீர்மோனை, அடி இயைபு
**விடை: அ) அடிமோனை, அடி இயைபு**

18. 'செம்பரிதி' - பிரிக்கும் முறை
அ) செம்மை + பரிதி ஆ) சிவந்த + பரிதி
இ) செம் + பரிதி ஈ) சிவப்பான + பரிதி **விடை: அ) செம்மை + பரிதி**

19. கீழ்க்கண்ட நூல்களுள் சிற்பியின் உரைநடை நூல் எது?
அ) சூரிய நிழல் ஆ) அலையும் சுவடும்
இ) ஒளிப்பறவை ஈ) சர்ப்பயாகம் **விடை: ஆ) அலையும் சுவடும்**

20. இளந்தமிழே கவிதையில் சிற்பியின் தமிழ்க் குறித்த உருவகம், உவமை யாது?
அ) செந்தமிழ், மயில்போல ஆ) முத்தமிழ், செம்பரிதி
இ) தமிழ்க்குயில், சிங்கம்போல ஈ) குளிர்பொதிகை, தென்தமிழ்
**விடை: இ) தமிழ்க்குயில், சிங்கம்போல**

## குறுவினா

1. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடை நூல்கள் யாவை?**
**சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய உரைநடை நூல்கள்:**
(i) இலக்கியச் சிந்தனைகள், (ii) மலையாளக் கவிதை, (iii) அலையும் சுவடும்.

2. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போல் சிவந்திருப்பதாக சிற்பி கூறுகிறார்?**
கதிரவன் மாலைநேரத்தில் மறையும் போது வானம் முழுவதும் **செந்நிறப் பூக்கள்** செறிந்து காணப்படுவது போல் சிவந்து இருக்கும். அதனைப் போல் **தொழிலாளர்களின் கைகள் சிவந்திருப்பதாக** சிற்பி கூறுகிறார்.


www.surabooks.com

**3. 'முத்தமிழே நீயுள்ளாய்' என்று எதற்காகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**

"உள்ளத்தில் பொங்கி பெருகி வரும் கவிதை உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு **இயல், இசை, நாடகம்** என்று மூன்று தமிழாக எங்கள் உயிராக இருக்கிறாய்" என்று சிற்பி கூறுகிறார்.

**4. கவிஞர் தென்தமிழை எவ்வாறு வரச்சொல்கிறார்?**

"சிங்கமானது, தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளிவருவது போல தென்தமிழே நீ வருவாயாக!" என்று கவிஞர் கூறுகிறார்.

**5. 'தென் தமிழே! சீறி வா, வா!' என்பதில் கூறப்பட்ட உவமை நயம் யாது?**

சிங்கம் கூண்டினை உடைத்துக் கொண்டு வீரத்துடன் வெளிவருவது உவமையாகும். இதே போல், குளிர் பொதிகையில் வளர்ந்த தென்தமிழ் தன்னுடைய வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை நீக்கி விட்டு வீறு கொண்டு எழுந்து வரவேண்டும் என்பது உவமேயம்.

**6. சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சிலவற்றை எழுதுக.**

**சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்களில் சில:**

நிலவுப் பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்ஜியங்களின் சங்கிலி.

**சிறுவினா**

**1. "பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்
பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.**

**இடம்** : இப்பாடலடிகள் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியத்தின் **'நிலவுப் பூ'** என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்** : பாண்டிய மன்னர்கள் அமைத்திருந்த தமிழ்ச் சங்கத்தில் அரியணையில் வீற்றிருந்த தமிழன்னையே! பாரி முதலான வள்ளல்கள் பலரை இந்த உலகிற்குக் கொடுத்துள்ளாய்!

**விளக்கம்** : பாண்டிய மன்னர்கள் முச்சங்கம் அமைத்து தமிழ்மொழியை வளர்த்தனர். அவர்களின் சங்கத்தில் அரசியாக கொலுவிருந்த தமிழன்னையே! புலவர்களையும் வறியவர்களையும் பேணிக் காத்த, **கொடைப் பண்புகள்** மிகுந்திருந்த பாரி முதலான **வள்ளல்கள்** பலரை இவ்வுலகிற்கு அளித்தாய்!

☆ ☆ ☆



உயிரினும் ஓம்பப் படும் - மொழி, கலை

# இயல் 1 தம்பி நெல்லையப்பருக்கு

- பாரதியார்

விரிவானம்

**கரு**

- ✳ ஒவ்வொரு எழுத்தாளர்களுக்கும் மொழியாட்சி வேறுபடுகிறது. கடிதங்களை இலக்கியமாக்கும் எழுத்தாளர்கள் மொழிக்காக தனி அழகை உருவாக்குகின்றனர்.
- ✳ தனிப்பட எழுதும் கடிதங்களிலும் அழுத்தமான எண்ணங்களை புகுத்தி பொதுமக்களுக்கும் உரியதாக ஆக்குபவர்கள் இருக்கின்றனர். அவ்வாறு எழுதப்பட்ட கடிதங்களில் பாரதியின் கடிதமும் ஒன்று.
- ✳ பாரதியின் மொழிநடை வீறுபெறும் கடித வரிகளை இங்கு காண்போம்.

**பாடப் பகுதி**

ரா.அ. பத்மநாபன் பதிப்பித்த 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலில் உள்ள மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் பாடப்பகுதியாக இடம் பெற்றுள்ளது.

## கற்பவை கற்றபின்

**1. காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனைக்கடிதம் ஒன்றினை எழுதி அதை வகுப்பில் படித்துக் காட்டுக.**

இடம் : மொடையூர்,
நாள்:20.05.2021.

அன்புள்ள மகாகவி பாரதி அவர்களுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீங்கள் நலமா? உங்களுடைய உடல் நலம் நன்றாக இருக்கும்படி கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். உங்களுடைய படைப்புகள் அனைத்தையும் நான் படித்துள்ளேன். ஒரு சிறந்த மனிதனாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் உங்களுடைய படைப்புகளை மட்டும் படித்தாலே போதும். உங்கள் படைப்புகளில் எனக்கு மிகவும் பிடித்தது.

“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; தழல் வீரத்தில்
குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?”

இந்தப் பாடலானது நம் வீரத்தின் அடையாளமாக திகழ்கிறது எனலாம்.

நேர்மையின் மறு உருவம் நீ! ஒழுக்கத்தின் உருவமே! வீரத்தை வளர்த்த வீரமே! உன்னால் இந்நாட்டில் வீரம் பிறந்தது. அதனால் விடுதலை பிறந்தது. இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்களிடம் அடிமையாக இருந்த நம் நாட்டை, வீரம் மிகுந்த பாடல்களைப் பாடி ஒவ்வொரு குடிமகனையும் வீரனாக்கி விடுதலை பெற செய்தவனே! உன் புகழ் என்றென்றும் வாழும், வளரும். முதன்முதலில் பெண்ணடிமையைப் பேசியவன் நீயே. உன்னால் பெண்களும் ஆணாதிக்கத்திலிருந்து விடுப்பட்டு கல்வி கற்று அனைத்து அரசாங்க பதவிகளில் இருக்கிறார்கள்.

உன்னால் மட்டுமே முடியும், எல்லாவற்றையும் சாதித்துக்காட்ட. உன் வழியை பின்பற்றினால் என்னாலும் முடியும். உன் புகழ் ஓங்குக. வாழ்க.

இப்படிக்கு
செ. ஜெயஸ்ரீ செந்தாமரை

உறைமேல் முகவரி

| |
|---|
| மகாகவி பாரதியார்,<br>எண் - 153, பெருமாள் கோயில் சன்னதி,<br>எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம். |

www.surabooks.com

## நம்மை அளப்போம் (புத்தக வினா)

**நெடுவினா**

ஆக. 2021; முதல் தி.தேர்வு 2022 & 2024; மே 2022; மார்ச் 2023; காலாண்டுத் தேர்வு 2023

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

| குறிப்புச் சட்டகம் |
|---|
| முன்னுரை |
| மொழிப்பற்று |
| சமூகப்பற்று |
| முடிவுரை |

**முன்னுரை :**

**"யாமறிந்த மொழிகளிலே**
**தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"**

பாரதியார் கவிஞராக, எழுத்தாளராக, பத்திரிகையாசிரியராக விடுதலை வீரராக, சீர்திருத்தவாதியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். புரட்சிக் கவிஞராக வலம் வந்த பாரதியார் கடித இலக்கியத்திற்கும் வித்திட்டவர். தமது தம்பியாகக் கருதிய பரலி.சு.நெல்லையப்பருக்கு அவர் எழுதிய கடிதத்தில் மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவைக் குறித்து காண்போம்.

**மொழிப்பற்று :**

பிறமொழிகளை அறிந்து கொண்டு, அம்மொழிகளில் வெளிவரும் பத்திரிகைகளில் உள்ள புதுமைகளைத் தமிழ்மொழியில் புகுத்த வேண்டும். புதிய செய்தி, புதிய யோசனை, புதிய உண்மை, புதிய இன்பம் ஆகியவற்றை தமிழ் மொழியில் கொண்டு வருவதன் மூலம் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் நோய்கள் தீர வேண்டும். வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அந்தப் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகளை மாணவர்களுக்கு பயிற்றுவித்து அவர்கள் வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூகோளம், விண்வெளி, இயற்கை பற்றிய ஆயிரக்கணக்கான நூல்கள் தமிழ்நாட்டில் பெருகிட வேண்டும்.

**சமூகப்பற்று :**

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள். அவற்றில் ஒன்றிற்கொன்று தாழ்வில்லை. பெண்ணை இழிவு செய்பவன் தன் கண்ணைத் தானே குத்திக் கொள்வதற்குச் சமமாகும். கல்வியறிவை பெறவிடாமல் பெண்ணை வீட்டிலே அடைத்து வைப்பவன் தன் கண்ணை மூடிக் கொள்வதற்குச் சமமாகும். இந்தச் சமூகத்தில் தொழில்கள், வணிகம், இயந்திரங்கள் யாவும் பெருக வேண்டும்.

**முடிவுரை:**

**தமிழன் என்று சொல்**
**மனதில் உறுதி வேண்டும்.**

என்று பாடிய பாரதியார், இலக்கியத் தரத்துடனும் பொதுநலப்பற்றுடனும் மொழிப்பற்றுடனும் எழுதியுள்ளமை குறித்து கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது - என்று கடிதம் எழுதியவர்** பிடிஏ–1

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன் **விடை: ஆ) பாரதியார்**

**2. பாரதியார், எங்கிருந்து பரலி சு.நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்?** பிடிஏ–3

அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை **விடை: அ) புதுச்சேரி**



www.surabooks.com

3. தம்பி நெல்லையப்பருக்கு - கட்டுரையின் ஆசிரியர் : ஜூலை 2022

அ) பாரதியார் ஆ) உத்தம சோழன் இ) பூமணி ஈ) ஐராவதம் மகாதேவன்

விடை: அ) பாரதியார்

4. 'வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு' என்ற நூலை எழுதியவர்....... முதல் திருப்புதல் தேர்வு 2024

அ) பாரதியார் ஆ) இளசை மணி

இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) பரலி சு. நெல்லையப்பர்

விடை: ஈ) பரலி சு.நெல்லையப்பர்

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. 'பாரதியின் கடிதங்கள்' என்ற நூலைப் பதிப்பித்தவர் .......... .

அ) ரா.அ.பத்மநாபன் ஆ) பரலி. சு. நெல்லையப்பர்

இ) குவளைக் கண்ணன் ஈ) கல்கி

விடை: அ) ரா.அ.பத்மநாபன்

2. பரலி சு.நெல்லையப்பர் பாரதியை விட .......... ஆண்டுகள் இளையவர்.

அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு

விடை: இ) ஏழு

3. 'வம்சமணி தீபிகை' என்ற நூலை எழுதியவர் ................ .

அ) பாரதியார் ஆ) பரலி.சு.நெல்லையப்பர்

இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசைமணி

விடை: இ) கவிகேசரி சாமி தீட்சிதர்

4. 'வம்சமணி தீபிகை' நூலை திருத்தி எழுதித் தருவதற்காக பாரதி, யாருக்கு கடிதம் எழுதினார்?

அ) வெங்கடேசுர எட்டப்பர் ஆ) ஜெகவீர ராம எட்டப்பர்

இ) ஜெகவீர பாண்டிய எட்டப்பர் ஈ) முத்து வீர எட்டப்பர்

விடை: அ) வெங்கடேசுர எட்டப்பர்

5. தன் சொந்த உழைப்பை நம்பாமல் பிறரைச் சார்ந்து பிழைப்பவர்களை பாரதியார் இவ்வாறு அழைத்தார்.

அ) சோம்பேறிகள் ஆ) அறிவாளிகள்

இ) மூடர்கள் ஈ) ஏமாற்றுபவர்கள்

விடை: இ) மூடர்கள்

6. சரியான தொடரைத் தேர்க.

1. பரலி.சு. நெல்லையப்பர் விடுதலை போராட்ட வீரர்
2. உய்யும் வழி நூலை இயற்றியவர் இவர்.
3. இவர் பாரதியாரை விட எட்டு ஆண்டுகள் இளையவர்
4. பரலி.சு. நெல்லையப்பர் பாரதியின் கடிதங்கள் நூலைப் பதிப்பித்தார்

அ) 1, 2 சரி ஆ) 1, 3 சரி இ) 3, 4 சரி ஈ) 1 ,4 சரி

விடை: அ) 1, 2 சரி

7. பரலி சு. நெல்லையப்பர் இயற்றாத கவிதை நூல்

அ) பாரதி வாழ்த்து ஆ) நெல்லைத் தென்றல்

இ) வம்சமணி தீபிகை ஈ) உய்யும் வழி

விடை: இ) வம்சமணி தீபிகை

8. பரலி.சு நெல்லையப்பரை தன்னுடைய உடன் பிறந்த தம்பி என்று அன்பு காட்டியவர்

அ) ரா.அ.பத்பநாபன் ஆ) வெங்கடேசுர எட்டப்பர்

இ) பாரதிதாசன் ஈ) பாரதியார்

விடை: ஈ) பாரதியார்

9. தமிழை வளர்க்க தமிழில் புகுத்த வேண்டியவைகளாக பாரதி கூறுவது.

அ) புதிய செய்தி ஆ) புதிய யோசனை

இ) புதிய உண்மை ஈ) இவை அனைத்தும்

விடை: ஈ) இவை அனைத்தும்

10. தமிழ்நாட்டில் பெருக வேண்டியனவாக பாரதி கூறுவது .................

அ) நவீன கலைகள் ஆ) பள்ளிக்கூடங்கள்

இ) விண்வெளி நூல்கள் ஈ) எதுவுமில்லை

விடை: ஆ) பள்ளிக்கூடங்கள்

www.surabooks.com

11. எட்டயபுர மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி எழுதப்பட்ட நூல் ..................
அ) நெல்லைத்தென்றல் ஆ) சக்கரவர்த்தினி
இ) வம்சமணி தீபிகை ஈ) இளசை மணி
**விடை: இ) வம்சமணி தீபிகை**

12. வம்சமணிதீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பு வெளியிட்டவர் ..................
அ) சாமி தீட்சிதர் ஆ) பரலி. சு. நெல்லையப்பர்
இ) பாரதி ஈ) இளசை மணி
**விடை: ஈ) இளசை மணி**

13. கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை? என்பது பாரதியின் ..................
அ) காவியம் ஆ) செய்யுள்
இ) கவிதைக் கடிதம் ஈ) உரையாடல்
**விடை: இ) கவிதைக் கடிதம்**

14. ஐயநின் அருளே அருங்கதி என்ன? என்று பாரதியார் யாருக்குக் கடிதம் எழுதினார்?
அ) பரலி. சு.நெல்லையப்பர் ஆ) சாமி தீட்சிதர்
இ) இளசை மணி ஈ) எட்டையபுர ஜமீன்
**விடை: ஈ) எட்டையபுர ஜமீன்**

15. தம் கண்ணை அடைத்தவன் யார்?
அ) பெண்ணை அடைத்தவன் ஆ) மனதை அடக்கியவன்
இ) பொருளை அடைத்தவன் ஈ) தன்னை அடைத்தவன்
**விடை: அ) பெண்ணை அடைத்தவன்**

16. தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் .................... கலைகள் வளர வேண்டும் என்கிறார் பாரதி.
அ) பழமையான ஆ) ஆய இ) நவீன ஈ) ஓவிய
**விடை: இ) நவீன**

17. பாரதியார் தம் மறைவிற்கு முன்னர் யாருக்குக் கடிதம் எழுதினார்?
அ) எட்டையபுர மன்னர் ஆ) குந்திகேசவர்
இ) சுவாமி தீட்சிதர் ஈ) பரலி சு. நெல்லையப்பர்
**விடை: ஆ) குந்திகேசவர்**

18. 'உனக்கு சிறகுகள் தோன்றுக. பறந்து போ
பற! பற! – மேலே! மேலே! மேலே!' – என்று யார் யாருக்காக எழுதினார்?
அ) பாரதி – எட்டையபுர மன்னர் ஆ) பாரதி – கவிகேசரி சாமி தீட்சிதர்
இ) பாரதி – இளசை மணி ஈ) பாரதி – நெல்லையப்பர்
**விடை: ஈ) பாரதி - நெல்லையப்பர்**

19. கீழ்க்கண்டவற்றுள் பரலி சு.நெல்லையப்பர் பதிப்பித்த நூல்கள் ...............
அ) கண்ணன் பாட்டு ஆ) நாட்டுப்பாட்டு
இ) பாப்பா பாட்டு ஈ) முரசுப் பாட்டு
i) அ, ஆ, இ மட்டும் ii) அ, இ,ஈ மட்டும்
iii) அ, ஆ, இ, ஈ iv) அ, இ மட்டும்
**விடை: iii) அ, ஆ, இ, ஈ**

20. கீழ்க்கண்ட நூல்களுள் பரலி சு. நெல்லையப்பர் எழுதாத நூல் எது?
அ) வம்சமணி தீபிகை ஆ) பாரதி வாழ்த்து
இ) நெல்லைத் தென்றல் ஈ) உய்யும் வழி
**விடை: அ) வம்சமணி தீபிகை**

21. சு.நெல்லையப்பர் ஆசிரியராகப் பணியாற்றிய பாரதியின் இதழ் எது?
அ) சூரியோதயம் ஆ) தேச பக்தன்
இ) கர்மயோகி ஈ) இந்தியா
**விடை: ஆ) தேச பக்தன்**

22. தமிழ்நாட்டில் தீர்க வேண்டுமென பாரதி கூறுவது?
அ) வியாபாரங்கள் ஆ) தொழில்கள்
இ) நோய்கள் ஈ) பள்ளிகள்
**விடை: இ) நோய்கள்**


enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000

**சிறுவினா**

**1. பாரதியார் தம் கடிதத்தில் கையாண்டுள்ள உருவக நயத்தை எடுத்து எழுதுக.**

(i) "நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய உள்-ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகும்." என்ற அடிகளில் உருவக நயம் அமைந்துள்ளது.

(ii) **'உள்ளக்கமலம்'** – உருவகம்.

(iii) உள்ளக்கமலம் என்றால் 'மனத் தாமரை' என்பது பொருளாகும். 'உன்னுடைய மனத்தாமரையில் பேரறிவாகிய சூரியனின் கதிர்கள் விழுவதால் நல்லின்பம் உண்டாகும்'.

(iv) உவமைக்கும் உவமேயத்திற்கும் வேறுபாடின்றி உவமையே பொருளாக வருவது **உருவகம்** ஆகும். உள்ளக் கமலம், பேரறிவாகிய சூரியக் கதிர்கள் இரண்டு சொற்களும் உருவக நயத்துடன் அமைந்துள்ளன.

**2. "உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.**
**பற! பற! -மேலே! மேலே! மேலே!" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்** : இவ்வடிகள் பாரதியார், பரலி சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில் இடம் பெற்றுள்ளன.

**பொருள்** : உன்னுடைய அறிவை விரிவு செய்து வாழ்க்கையில் மேலும் மேலும் முன்னேறிச் செல்க!

**விளக்கம்** : பறவைகளுக்கு சிறகுகள் முளைத்ததும் அவை வானில் பறந்து செல்கின்றன. அதுபோல உன்னுடைய அறிவை மேலும் மேலும் விரிவு செய்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று பாரதியார் எழுதியுள்ளார்.

**3. தமிழ்நாடு எவ்வாறெல்லாம் சிறக்க வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?**

தமிழ்நாட்டில்

(i) நோய்கள் நீங்க வேண்டும்.

(ii) வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும்.

(iii) தமிழ்ப் பள்ளிக்கூடங்களில், மாணவர்கள் புதிய கலைகள் அனைத்தையும் கற்று வாழ்வில் உயர வேண்டும்.

(iv) சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, விண்வெளி, இயற்கை குறித்த ஆயிரக்கணக்கான நூல்கள் தோன்ற வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்.

**4. வம்சமணி தீபிகை என்ற நூலை பாரதியார் திருத்தி வெளியிட எதற்காக விரும்பினார்?**

(i) வம்சமணி தீபிகை என்ற நூலை எழுதியவர் கவிகேசரி சாமி தீட்சிதர் ஆவார்.

(ii) அந்நூல், எட்டயபுர மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி எழுதப்பட்டதாகும்.

(iii) அந்நூலில் பல விதமான குற்றங்கள் இருந்ததால் அதனைத் திருத்தி வெளியிட பாரதியார் விரும்பினார்.

(iv) தன் விருப்பத்தை எட்டயபுரத்தை ஆட்சி செய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினார். ஆனால் பாரதியின் ஆசை நிறைவேறவில்லை.

**5. பரலி. சு.நெல்லையப்பர் – சிறு குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பரலி. சு. நெல்லையப்பர் |
| **பெற்றோர்** | : | சுப்பிரமணிய பிள்ளை – முத்துலட்சுமி அம்மாள் |
| **ஊர்** | : | பரலிக் கோட்டை |
| **காலம்** | : | 18.09.1889 முதல் 28.03.1971 வரை |
| **துணையாசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்** | : | பாரதியார் நடத்திய சூரியோதம், கர்மயோகி இதழ்கள் மற்றும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்கள். |
| **படைப்புகள்** | : | நெல்லைத் தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்கள், வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்று நூல். |
| **பதிப்பித்த நூல்கள்** | : | பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப் பாட்டு, முரசுப்பாட்டு. |
| **பன்முகச் சிறப்பு** | : | விடுதலைப்போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர். பாரதியார் இவரை தன்னுடைய அருமைத் தம்பியாகக் கருதி பாராட்டி வந்தார். |

☆ ☆ ☆



www.surabooks.com

இயல் 1

உயிரினும் ஓம்பப் படும் - மொழி, கலை

# தமிழாய் எழுதுவோம்

இனிக்கும் இலக்கணம்

## கற்பவை கற்றபின்

மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

மாணவர்கள் தாங்களாகவே செய்ய வேண்டியவை.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **பிழையான தொடரைக் கண்டறிக.** பிடிஏ–2, 6; அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019; ஜூலை 2022; மார்ச் 2024

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

விடை: **இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**

2. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.** செப். 2020; ஜூலை 2022

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். பிடிஏ–1, முதல் தி.தேர்வு 2022

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது. பிடிஏ–1, முதல் தி.தேர்வு 2022

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

விடை: **அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்க.** ஜூலை 2022; ஜூன் 2023

(i) நான் இன்று மாலை ஊருக்கு **முடிந்தால்** வருவேன். உன்னிடம் இருக்கும் புத்தகங்களை எனக்கு **தரலாமே.**

(ii) இவ்வேலையை செய்து **முடித்தால்** பரிசு **தரலாம்.**

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?** அரை.தேர்வு 2023; மார்ச் 2024

**தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்:**

(i) எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன, ல, ள, ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து உச்சரிக்கப் பழகுதல் வேண்டும்.

(ii) தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்ள வேண்டும்.

(iii) தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்தபடியோ எழுதப் பழக வேண்டும்.

(iv) வேகமாக எழுத முயற்சிப்பது பிழைக்கு வழிவகுக்கும்.

(vi) கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

www.surabooks.com

## நம்மை அளப்போம் (புத்தக வினா)

**குறுவினா**

4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கே அமைத்து ஒரு தொடர் எழுதுக.**
   (i) வைகறை விடியல் காண்பது வனப்பு
   (ii) அதிகாலை விடியல், பார்ப்பதற்கு அழகாக இருக்கும். (வனப்பு - அழகு)
   (iii) கன்னி விடியல் கவினுறு வனப்பு. கன்னி விடியலை வைத்து கவிஞர் கவிதை எழுதுவர். அக்கவிதை அழகு தரும்.

**நெடுவினா**

4. **'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை எழுதுக.**

ஜூலை–2022




**சொல்லோவியங்கள் (கவிதை)**

**நூல் வெளியீட்டு விழா**

**நாள் :** 12-06-2021 வெள்ளிக்கிழமை **நேரம் :** மாலை 6.50 மணி
**இடம் :** கபிலன் நவீன இலக்கிய அகம், மெட்ரிக் மேனிலைப் பள்ளி சென்னை - 42

| | |
|---|---|
| **நிகழ்ச்சி நடத்துநர்** | : கவிஞர் சி.கபிலன் |
| **மங்கல விளக்கேற்றல்** | : திருமதி, செந்தமிழ்ச்செல்வி |
| **வரவேற்புரை** | : நாட்டியக் கலாநிதி. புவனா தமிழரசன் |
| **நிகழ்வரங்கு** | : புத்தக ஆய்வும் அறிமுகமும்<br>கவிஞர். முத்தரசன் அவர்கள்<br>கவிஞர் அறிவழகன் அவர்கள் |
| **ஏற்புரை** | : கவிஞர் சு. கபிலன் அவர்கள் |
| **அறிமுக உரையும்**<br>**வெளியீட்டு உரையும்** | : திரு.மு.சௌந்தர பாண்டியன் அவர்கள்<br>(புத்தக வெளியீடு) |
| **சிறப்புரை** | : கவிஞர் தென்றல் தென்னவன் |
| **நன்றியுரை** | : திருமதி. இராசாத்தி தென்றல் தென்னவன் |

அனைவரும் வருக! (இரவு 8.30க்கு நிறைவு பெறும்)

**நன்றியுரை:**

அனைவருக்கும் மாலை வணக்கம். இத்தருணம் நன்றி தெரிவிக்கும் தருணம். இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்புரையாற்றி எங்கள் செவிகளுக்கு விருந்தளித்த சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு நன்றி கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா சிறப்பாக நடைபெற எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எங்கள் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கு நன்றி கூறுவதில் ஆனந்தமடைகிறேன். பெற்றோர்களுக்கும், என் சகோதர சகோதரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நவில்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அலுவலக பணியாளர்களுக்கும் ஒலி, ஒளி அமைத்துக் கொடுத்தவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

### பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

1. **உயிரெழுத்துகள் .................. வகைப்படும்.** பிடிஏ–2
   அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு
   **விடை: ஈ) இரண்டு**

2. **பொருந்தாத சொல்லை அறிக.** பிடிஏ–2
   அ) உறுப்பினர் ஆ) குழுவினர் இ) இயக்குனர் ஈ) ஊரினர்
   **விடை: இ) இயக்குனர்**

3. **பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க :** செப்–2020
   அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
   ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
   இ) உங்களை யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
   ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
   **விடை: ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?**

4. **தமிழில் உயிர்மெய்யெழுத்துகள் 216. அவ்வாறெனில் உயிர்மெய் நெடில் எழுத்துகள் :** மார்ச் 2023
அ) 136 ஆ) 120 இ) 126 ஈ) 116 விடை: **இ) 126**

**குறுவினா**

1. **எழுதும் போது ஏற்படும் பிழைகள் யாவை?** பிடிஏ–1
**எழுதும் போது ஏற்படும் பிழைகள்:** எழுத்துப்பிழை, சொற்பொருட்பிழை, சொற்றொடர்ப் பிழை, பொதுவான பிழைகள் சில

## கூடுதல் வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1. **கீழ்க்காண்பவற்றுள் சரியான தொடரைத் தேர்க.**
அ) நேற்று மாலை இயக்குனர் வந்தார் ஆ) நேற்று மாலை இயக்குநர் வந்தார்
இ) நேற்று மாளை இயக்குனர் வந்தார் ஈ) நேற்று மாலை இயக்குணர் வந்தார்
விடை: **ஆ) நேற்று மாலை இயக்குநர் வந்தார்**

2. **'பல் + முகம்' சேர்த்து எழுதுக.**
அ) பன்முகம் ஆ) பல்முகம் இ) பண்முகம் ஈ) பந்முகம் விடை: **அ) பன்முகம்**

3. **ஈரொற்றாய் அமைபவை யாவை?**
அ) ட்,ற் ஆ) க், ச், த், ப் இ) ய், ர், ழ் ஈ) ஞ், ந், வ் விடை: **இ) ய், ர், ழ்**

4. **பல் + நூல் என்பதைச் சேர்த்து எழுதும் போது எவ்வாறு மாறும்?**
அ) பல்நூல் ஆ) பல நூல் இ) பன்னூல் ஈ) பண்நூல் விடை: **இ) பன்னூல்**

5. **கீழ்க்கண்டவற்றில் பிழையான தொடரைக் கண்டறிக.**
அ) என் தாயார் வந்துவிட்டார் ஆ) அறம் செய்ய விரும்பு
இ) என்னிடம் பல புத்தகங்கள் உள்ளன ஈ) குளத்தில் தாமரை அளகாகப் பூத்திருந்தது
விடை: **ஈ) குளத்தில் தாமரை அளகாகப் பூத்திருந்தது**
**சரியான தொடர்:** குளத்தில் தாமரை **அழகாகப்** பூத்திருந்தது.

6. **கீழ்க்கண்டவற்றில் சரியான தொடரைத் தேர்க.**
அ) இளங்கோ முன்னூறு ரூபாய் சேமிக்க முயற்சித்தான்
ஆ) இளங்கோ முந்நூறு ரூபாய் சேமிக்க முயன்றான்
இ) இளங்கோ முன்நூறு ரூபாய் சேமிக்க முயன்றான்
ஈ) இளங்கோ முண்ணூறு ரூபாய் சேமிக்க முயற்சித்தான்
விடை: **ஆ) இளங்கோ முந்நூறு ரூபாய் சேமிக்க முயன்றான்**

7. **கீழ்க்கண்டற்றில் பேச்சு தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**
அ) பசுமாடு கன்றைப் போட்டது ஆ) பசுமாடு கன்றை ஈன்றது
இ) மாணவர்கள் வந்தார்கள் ஈ) பூக்களில் தலைமை வாய்ந்தது தாமரை
விடை: **அ) பசுமாடு கன்றைப் போட்டது**

8. **கீழ்க்கண்டவற்றில் சரியாக அமைந்துள்ள சொற்குழுவைக் காண்க.**
அ) நிர்வாகம், கர்மம், முயற்ச்சி ஆ) நிருவாகம், கன்மம், முயற்சி
இ) காட்ச்சி, கன்டு, மண்றம் ஈ) டமாரம், ரப்பர், க்ரீடம்
விடை: **ஆ) நிருவாகம், கன்மம், முயற்சி**

9. **ஆய்த எழுத்து குறித்து கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்க.**
i) ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
ii) ஆய்த எழுத்து சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்
iii) ஆய்த எழுத்து தனிக்குறிலை அடுத்து வரும்
iv) ஆய்த எழுத்து தனிநெடிலை அடுத்து வரும்



www.surabooks.com

அ) (i) மற்றும், (iii) சரியானவை ஆ) (ii) மற்றும், (iv) சரியானவை
இ) (i) மற்றும், (iv) சரியானவை ஈ) (ii) மற்றும், (iii) சரியானவை

**விடை: அ) (i) மற்றும், (iii) சரியானவை**

**10. கீழ்க்காண்பவற்றுள் தவறானதைத் தேர்க.**
அ) கடல் + கரை – கடற்கரை ஆ) கல் + சிலை – கற்சிலை
இ) மக்கள் + பேறு – மக்கள் பேறு ஈ) நாள் + மீன் – நாண்மீன்

**சரியான தொடர்:** மக்கள் + பேறு – **மக்கட்பேறு** **விடை: இ) மக்கள் + பேறு - மக்கள் பேறு**

**11. எழுதும்போது ஏற்படும் பிழைகளைக் ................. வகைப்பாட்டில் பிரிக்கலாம்.**
அ) மூன்று ஆ) ஆறு இ) நான்கு ஈ) இரண்டு **விடை: இ) நான்கு**

**12. தமிழில் மெய்யெழுத்துகள் ......................**
அ) 216 ஆ) 126 இ) 12 ஈ) 18 **விடை: ஈ) 18**

**13. மெய்யெழுத்துகள் ................... வகைப்படும்.**
அ) நான்கு ஆ) மூன்று இ) பத்து ஈ) பதினெட்டு **விடை: ஆ) மூன்று**

**14. தமிழில் உயிர்மெய் எழுத்துகள் எத்தனை?**
அ) 216 ஆ) 126 இ) 90 ஈ) 18 **விடை: அ) 216**

**15. தமிழில் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் முறையே ..................**
அ) 90;126 ஆ) 126;90 இ) 18;12 ஈ) 12;18 **விடை: அ) 90;126**

**16. கூற்று 1 : பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம்.**

**கூற்று 2 : குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பதும் எழுத்துகள் வரும் முறையில் தெளிவற்றிருப்பதும் பிழைகள் மலியக் காரணமாய் அமைகின்றன.**
அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, 2 சரி **விடை: ஆ) கூற்று 1,2 சரி**

**17. சொல்லின் தொடக்கமாக வரும் எழுத்து எது?**
அ) ர ஆ) ண இ) ந ஈ) ல **விடை: இ) ந**

**18. தமிழில் சொல்லின் தொடக்கமாக ............... வருவதில்லை.**
அ) உயிர்மெய் ஆ) உயிர் இ) எதுவுமில்லை ஈ) மெய் **விடை: ஈ) மெய்**

**19. தமிழ்ச் சொற்கள் ............... மெய்யோடு முடியாது.**
அ) மெல்லினம் ஆ) இடையினம்
இ) வல்லினம் ஈ) அனைத்தும் **விடை: இ) வல்லினம்**

**20. கீழ்க்கண்டவற்றுள் தமிழ்ச்சொல் எது?**
அ) ப்ரியா ஆ) இதழ் இ) பார்க் ஈ) கிரீடம் **விடை: ஆ) இதழ்**

**21. ........... என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை.**
அ) ட், ற் ஆ) ய்,ச் இ) ழ், ர் ஈ) எதுவுமில்லை **விடை: அ) ட், ற்**

**22. சொல்லின் முதலில் வராத எழுத்துகள் ............................**
அ) க, ப ஆ) த,ம இ) ந, ஞ ஈ) ட,ற **விடை: ஈ) ட, ற**

**23. சொல்லின் இடையில் மட்டுமே வரும் எழுத்து**
அ) வல்லினம் ஆ) மெல்லினம்
இ) ஆய்தம் ஈ) இடையினம் **விடை: இ) ஆய்தம்**

**24. மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வராத எழுத்துகள் ..........**
அ) ங, ஞ ஆ) ந,ம இ) ண, ன ஈ) ந, ஞ **விடை: இ) ண, ன**

www.surabooks.com

25. **தனிக்குறிலை அடுத்து வராத ஒற்றுகள் ...........**

அ) ல், ள் ஆ) ர,ழ இ) ண், ன் ஈ) ப், ம் **விடை: ஆ) ர, ழ**

26. **........... வரின் ஒரு - ஓர் எனவும் இரு - ஈர் எனவும் மாறும்.**

அ) உயிர் ஆ) மெய் இ) உயிர்மெய் ஈ) ஆய்தம் **விடை: அ) உயிர்**

27. **லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் ............... கரமாய்த் திரியும்.**

அ) ழ ஆ) ன இ) ர ஈ) ண **விடை: ஆ) ன**

28. **ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ......... கரமாய்த் திரியும்.**

அ) ட் ஆ) ன இ) ண ஈ) ற் **விடை: இ) ண**

## குறுவினா

1. **எழுத்துப் பிழைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?**

**எழுத்துப் பிழைகள் ஏற்படுவதற்கான காரணங்கள் :**

(i) பேசுவதைப் போலவே எழுத எண்ணுவது முதன்மையான காரணம்.
(ii) குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பது.
(iii) எழுத்துகள் வரும் முறையில் தெளிவு இல்லாமல் இருப்பது.

2. **ஆய்த எழுத்து சொல்லில் வரும் முறைகள் குறித்து எழுதுக.**

(i) ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
(ii) தனிச்சொல்லாக இருப்பின் மூன்று எழுத்துகளில் வரும்.
(iii) தனிக்குறிலை அடுத்து வரும். **(எ.கா)** அஃது, எஃகு, கஃசு

3. **மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக எந்த எழுத்துகள் வருவதில்லை?**

மெல்லின எழுத்துகளில் **ண, ன** ஆகியவை சொல்லின் தொடக்கமாக வாரா.

**(எ.கா)** மெல்லின எழுத்துகள்: ங, ஞ, ண, ந, ம, ன

ங – ஙப்போல் வளை ஞ – ஞயம்பட உரை ந – நன்றி மறவேல் ம – மனம் தடுமாறேல்

4. **ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகள் எப்போது இயல்பாக நிற்கும்?**

ய், ர், ல், ழ், ள் ஆகிய எழுத்துகளுக்குப் பின்,

(i) வியங்கோள் வினைமுற்று வரும்போது இயல்பாய் நிற்கும். **(எ.கா)** தேய்க, வாழ்க, செல்க, ஊர்க
(ii) 'கள்' விகுதி வரும் போது இயல்பாய் நிற்கும். **(எ.கா)** நாய்**கள்**, கால்**கள்**, தோள்**கள்**
(iii) வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும் போது இயல்பாய் நிற்கும். **(எ.கா)** தாய்**சேய்**, ஊர்**சூழ்**, செல்**கணம்**

5. **ஈரொற்றாய் வரும் ஒற்றுகள் யாவை?**

ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். ஏனையவை அளபெடுத்தால் மட்டுமே வரும்.

**(எ.கா)** பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை

6. **ரகர, ழகர ஒற்றுகளின் விதிகளை எழுதுக.**

தனிக்குறிலை அடுத்து ரகர, ழகர ஒற்றுகள் வாரா.

தனிக்குறிலை அடுத்து ரகர ஒற்று வருமானால் அதனைத் தமிழ் இயல்புக்கேற்ப திருத்தி எழுத வேண்டும்.

**(எ.கா)**

| பிழை | திருத்தம் |
|---|---|
| நிர்வாகம் | நிருவாகம் |
| கர்மம் | கருமம், கன்மம் |

7. **ஒரு, இரு என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை எவ்வாறு மாற்றமடையும்?**

ஒரு, இரு என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை முறையே **ஓர், ஈர்** என்று மாற்றமடையும்.

www.surabooks.com

**8. அது, இது, எது என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை எவ்வாறு மாற்றமடையும்?**

அது, இது, எது என்ற சொற்களின் பின் உயிரெழுத்து வந்தால் அவை முறையே **அஃது, இஃது, எஃது** என்று மாற்றமடையும்.

**9. அல்வழிப் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை எழுதுக.**

**அல்வழிப் புணர்ச்சி:**

(i) தனிக்குறிலை அடுத்து வரும் லகரம், வருமொழியில் தகரம் வந்தால் ஆய்த எழுத்தாக மாறும்.

(ii) தகரம் றகரமாக மாறும்.

**(எ.கா)** அல்+ **தி**ணை – அஃறிணை; பல்+**து**ளி – பஃறுளி

## சிறுவினா

**1. வல்லின மெய்கள் சொற்றொடரில் அமைவதற்கான விதிகளை வரிசைப்படுத்தி எழுதுக.**

(i) வல்லின மெய்கள் சொல்லின் இறுதியில் வாரா.

(ii) வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா. ட், ற் ஆகிய மெய்யெழுத்துகளை அடுத்து மெய்யெழுத்து வரக்கூடாது.

**(எ.கா)**

| பிழை | திருத்தம் |
|---|---|
| காட்ச்சி | காட்சி |
| முயற்ச்சி | முயற்சி |

(iii) க், ச், த், ப் ஆகியவற்றின் பின் அந்த எழுத்துகளின் வரிசைகளே அமையும். பிற மெய்யெழுத்து வராது. **(எ.கா)** கா**க்கை**, ப**ச்சை**, ப**த்து**, உ**ப்பு**

(iv) ட், ற் ஆகிய மெய்யெழுத்துகளுக்குப் பின் அவ்வெழுத்து வரிசை அமையும். **(எ.கா)** பா**ட்டு**, கா**ற்று**

(v) ட்,ற் ஆகிய மெய்யெழுத்துகளுக்குப் பின் க, ச, ப, ஆகிய எழுத்துகளின் வரிசை அமையும்.

**(எ.கா)**

| | 'க' வரிசை | 'ச' வரிசை | 'ப' வரிசை |
|---|---|---|---|
| ட் | வெட்கம் | காட்சி | திட்பம் |
| ற் | கற்க | கற்சிலை | கற்பவை |

(vi) ட, ற ஆகிய எழுத்துகள் சொல்லின் முதலெழுத்தாக அமையக் கூடாது. **(எ.கா)** டமாரம், றப்பர்.

(vii) தனிச்சொல்லின் இடையில் வல்லின எழுத்துகள் வந்தால் அவற்றின் முன் அவ்வல்லின மெய் வரும். **(எ.கா)** த**க்கை**, ப**ச்சை**, ப**ட்ட**ம், ப**த்து**, த**ப்பு**, க**ற்று**

(viii) தனிச் சொல்லின் இடையில் வல்லின எழுத்துகள் வந்தால் அவ்வல்லின எழுத்துகளின் இனமான மெல்லின மெய்களும் தோன்றும். **(எ.கா)** த**ங்**கை, இ**ஞ்**சி, ப**ண்**டு, ப**ந்**து, பா**ம்**பு, க**ன்**று

**2. லகர ளகர விதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

(i) வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு.
**(எ.கா)** கல் + சிலை = கற்சிலை
கடல் + கரை = கடற்கரை

(ii) லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு. **(எ.கா)** பல் + முகம் = பன்முகம்

(iii) ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு. **(எ.கா)** மக்கள் + பேறு = மக்கட்பேறு

(iv) ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு. **(எ.கா)** நாள் + மீன் = நாண்மீன்

(v) வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும்.
**(எ.கா)** சொல் + துணை = சொற்றுணை

(vi) வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும்.
**(எ.கா)** பல் + நூல் = பன்னூல்

(vii) அல்வழியில், தனிக்குறிலடுத்த லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும்.
**(எ.கா)** அல் + திணை = அஃறிணை
பல் + துளி = பஃறுளி

www.surabooks.com

### பொருள் வேறுபாட்டினை உணர்த்தும் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அறம்<br>அரம் | தருமம், நீதி<br>ஒரு வகைக் கருவி (மரம் அறுப்பது) | கிளி<br>கிலி | பறவை, வெட்டுக்கிளி<br>அச்சம், பயம் |
| குறை<br>குரை | சுருக்கு குறைத்து மதிப்பிடு<br>நாய் குரைத்தல் | என்றாள்<br>என்றால் | இலக்கணம் படித்தேன் **என்றாள்.**<br>தனிக்குறில் **என்றால்** என்ன? |
| வளம்<br>வலம் | வளமை, அழகு<br>சுற்றுதல், வலப்பக்கம் | போனாள்<br>போனால் | உடற்பயிற்சி செய்து மெலிந்து **போனாள்**<br>சொல்லப்**போனால்** அவன் செய்தது சரிதான் |
| களம்<br>கலம் | இடம், போர்க்களம்<br>கப்பல், பாத்திரம் காலாண்டுத் தேர்வு 2019 | ஆணை<br>ஆனை | கட்டளை<br>யானை |
| மழை<br>மலை | மழைநீர், மேகம்<br>குன்று, பொருப்பு, வெற்பு, சிகரம் | | |

## மொழியை ஆள்வோம்

**இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்**

எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்திப் பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை.

**விடை:**

**முன்னுரை :**

கல்வி என்பது நம் அறியாமையைப் போக்கும் கருவி ஆகும். இதன் இன்றியமையாமையை உணர்த்துவதற்கு நம் தமிழ்ச் சான்றோர்கள் 'இளமையில் கல்' என்றும் 'கற்க கசடற' என்றும் கூறியுள்ளனர். அப்படிப்பட்ட கல்வியை நாம் நம் தாய்மொழியில் கற்பது சிறந்தது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

தாய்மொழியில் கல்வி கற்பதனால் மாணவர்களால் உண்மையான அறிவைப் பெற முடிகிறது. சிறப்பாகச் சிந்திக்க முடிகிறது. அவர்கள் கற்றதை சமுதாயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. தாய்மொழியில் கற்பதால் இவர்களுக்குக் கற்கும் திறன் நாளடைவில் வளர்ச்சி பெறுகிறது. இம்முறையால் மாணவர்கள் தன்னம்பிக்கை பெறுகிறார்கள். எளிதில் உரையாடும் ஆற்றலும் சிறந்த பேச்சாற்றலும் வளர்கிறது. தாய்மொழியில் கற்றவர்கள் சிறந்த படைப்பாளராக இயலும். தாய்மொழியை நன்கு அறிந்த மாணவர்களால் பிற மொழியை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். பிறமொழியைச் சரளமாகப் பேச இயலும். தாய்மொழியை அறியாமல் பிற மொழியில் புலமை பெற விரும்புவது 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படும்' கதைதான்.

**தாய்மொழிச் சிந்தனை :**

தாய்மொழிக் கல்வியே சிந்தனைத் திறனை, ஆராய்ச்சிப் புலமையை வளர்க்கும்; பன்மடங்கு விரிவாக்கும். மொழிக்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. குழந்தையின் மூளைக்கு மற்ற மொழிகளைவிட தாய்மொழியை உள்வாங்கிக் கொள்ளும் திறன் அதிகம். ஏனென்றால் குழந்தை தாயின் கருவறைக்குள்ளேயே தனது மொழியைத் தெரிந்து கொள்கிறது.

தாய்மொழியில் கல்வி கற்பதன் மூலம் குழந்தைகள், கற்பதைத் தாங்கள் பேசுவதுடனும் சமுதாயத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. அதனால் அவர்கள் ஒரு விஷயத்தை நோக்கும் விதம் வேறுமொழியில் கற்பவர்களை விட மாறுபடுகிறது. இவை கற்கும் திறனை நாளடைவில் அதிகரிக்கச் செய்கிறது.

**அறிஞர்களின் பார்வை :**

"தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன் மூலம் ஆக்கப்பூர்வ சிந்தனையைக் குழந்தைகள் மத்தியில் கொண்டு வர முடியும்" என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறியுள்ளார்.

ஒருவனது இதயத்தைத் தொடுவதற்கு அவனது தாய்மொழியில் பேசவேண்டும் என்றும் பொதுமொழியில் பேசினால் அவனது எண்ணத்தை மட்டுமே அறிய முடியும் என்றும் நெல்சன் மண்டேலா தாய்மொழிக் கல்வி பற்றிக் கூறியுள்ளார். யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு தாய்மொழிக் கல்வி பயிலும் குழந்தைகளே மிகவும் ஆழ்ந்து கல்வி கற்கின்றனர் எனக் கூறியுள்ளது. இது அனைத்து வயதினருக்கும் அளிக்கப்படுகிற கல்விக்கும் பொருந்தும். 'பள்ளிகளில் பயிற்று மொழியாகத் தாய்மொழிதான் இருக்க வேண்டும்' என்பது மகாத்மா காந்தியடிகளின் கருத்து.

**கற்கும் திறன் – பயன் :**

மாணவர்களின் ஆற்றலை தாய்மொழிக் கல்வி வளப்படுத்துகிறது. அவர்களின் படைப்பாற்றலை அதிகப்படுத்துகிறது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். எளிதாகப் பாடங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதனால் ஆசிரியர்கள் எளிதில் கலந்துரையாடலில் ஈடுபட முடியும். இதனால் மாணவர்களின் பங்களிப்பு உள்ள ஒரு கல்வி முறை உருவாகிறது.

**இன்றைய நிலை :**

தாய்மொழிக் கல்வி கற்றால் முன்னேற முடியாது ஆங்கிலவழி கல்வி மட்டுமே உயர்ந்தது என்ற கருத்து பெற்றோர்களிடையே நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், இஸ்ரோ அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர் சிவன் ஆகியோர் தமிழ் வழியில் (தாய்மொழியில்) கல்வி கற்றவர்கள்தாம். கல்வியும் மொழியும் நமது இரு கண்கள் ஆகும்.

**முடிவுரை :**

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்றார் பாரதிதாசன். அப்புகழுக்கெல்லாம் சொந்தமான தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் தாய்மொழியில் கல்வி பயின்று மொழியைச் சிறப்பிப்போம்.

**தமிழாக்கம் தருக.**

பிடிஏ–2, 3; கா.தேர்வு 2019 & 2023; மே 2022

1. **Learning is a treasure that will follow its owner everywhere.** முதல் திருப்புதல் தேர்வு 2024

கல்விச் செல்வம், கற்றோருக்கு செல்கின்ற இடமெல்லாம் சிறப்பைத் தரும்.

2. **A new language is a new life.** ஜூன் 2023; காலாண்டுத் தேர்வு 2023; மார்ச் 2024

புதிய மொழி என்பது புதிய வாழ்க்கை போன்றது.

3. **If you want people to understand you, speak their language.**

ஜூன் 2023; க.தேர்வு 2023; மு.தி.தேர்வு 2024; மார்ச் 2024

உங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் அவர்களது மொழியிலேயே உரையாட வேண்டும்.

4. **Knowledge of languages is the doorway to wisdom.** ஜூன் 2023; க.தேர்வு 2023; மு.தி.தேர்வு 2024; மார்ச் 2024

பன்மொழி அறிவானது, ஞானத்தின் நுழைவாயில் ஆகும்.

5. **The limits of my language are the limits of my world.** ஜூன் 2023; முதல் திருப்புதல் தேர்வு 2024; மார்ச் 2024

என்னுடைய மொழியின் எல்லையே என்னுடைய உலகத்தின் எல்லை ஆகும்.

**இலக்கிய நயம் பாராட்டுக.**

பிடிஏ–5, 6; மார்ச் 2024

முச்சங்கங் கூட்டி
  முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
  அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
  சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
  அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

**திரண்ட கருத்து :**

**திரண்ட கருத்துப் பாடலின் முழுமையை உணர்த்தும்**

தமிழ்த்தாயானவள், முதல், இடை, கடை என்ற மூன்று சங்கங்களை அமைத்து, அறிவில் சிறந்த புலவர்களைக் கொண்டு, அந்தச் சங்கத்தில் அளவிட இயலாத பொருட்சுவை நிறைந்த சொற்களால் ஆன கவிதைகளை இயற்றச் செய்து, அற்புதங்களை நிகழ்த்திய பெருமாட்டி ஆவாள்.

**மையக் கருத்து :**

**மனதைத் தொடுவது மையக் கருத்து**

முச்சங்கத்தின் வாயிலாக, புலவர்கள் பொருட்சுவையும் சொற்சுவையும் நிறைந்த பாடல்களை இயற்றுவதற்குக் காரணமாக இருந்தவள் தமிழன்னை.

**நயங்கள்:**

**மோனைத் தொடை :**

**காட்டிற்கு அழகு யானை
கவிதைக்கு அழகு மோனை**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவருவது மோனைத் தொடையாகும்.

முச்சங்கம் – முதுபுலவர் ; அச்சங்க – அளப்பரிய ; அற்புதங்கள் – அமைத்த

**எதுகைத் தொடை:**

**குளிருக்கு அழகு உதகை
கவிதைக்கு அழகு எதுகை**

அடிதோறும் அல்லது சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகைத் தொடையாகும்.

முச்சங்கம் – அச்சங்கம் ; சொற்சங்கம் – அற்புதங்கள்

**இயைபுத் தொடை:**

**செய்யுளின் இயைபு
படிப்போர்க்கு வியப்பு**

அடிதோறும் இறுதிச் சீர் ஒன்றிவருவது இயைபுத் தொடை ஆகும். அடிதோறும் 'கூட்டி' என்ற சொல் இறுதியாக அமைந்துள்ளது.

**அணிநயம் :**

**உடலுக்கு ஊக்கம் தருவது கனி
கவிதைக்கு ஊக்கம் தருவது அணி**

இப்பாடலில் **உயர்வு நவிற்சி அணி** பயின்று வந்துள்ளது.

**விளக்கம் :** சங்கப்புலவர்கள் பொருட்சுவையும் சொற்சுவையும் ஒருங்கே அமையப் பெற்ற செய்யுள்களை இயற்றியது இயல்பான ஒன்றாகும். தமிழன்னை, புலவர்களைச் சங்கத்திற்கு வருவித்து செய்யுள்களை இயற்ற வைத்தாள் என்று உயர்வுபட கூறியமையால் இது **உயர்வு நவிற்சி அணி** ஆயிற்று.

www.surabooks.com

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி. குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**- மொழி வரலாறு (மு.வரதராசனார்)**

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரிய கலை எது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை யாது?
3. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?
4. மக்களுக்கும் மொழிக்கும் உள்ள உறவுகள் யாவை?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.

**உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

**(தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல)**

1. **தாமரை இலை நீர்போல : (எதிலும் ஒட்டாத நிலை)**
   இவ்வுலக வாழ்க்கையின் மீது **தாமரை இலை நீர்போல** முனிவர்கள் வாழ்ந்தனர்.
2. **கிணற்றுத்தவளைபோல: (அறியாமையில் வாழ்வது)**
   **கிணற்றுத் தவளை போல்** உலக நடப்புகளை அறியாமல் வாழ்பவர் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கடினம்.
3. **எலியும் பூனையும்போல: (தீராப் பகை)** அ.மா.வி 2019; செப். 2020
   **எலியும் பூனையும் போல** சாதி மத வேறுபாடுகளால் மக்கள் பகைமை உணர்வோடு வாழ்ந்தால் சமூகத்தின் முன்னேற்றம் தடைபடும்.
4. **அச்சாணி இல்லாத தேர்போல: (ஆதரவற்ற நிலை)** மார்ச் 2020
   சான்றோரின் வழிகாட்டுதல் இல்லை என்றால் **அச்சாணி இல்லாத தேர்போல** மக்கள் நல்வழியில் செல்ல இயலாமல் துன்புறுவர்.
5. **உள்ளங்கை நெல்லிக்கனிபோல: (தெளிவாக அறிதல்)** செப். 2020
   தமிழாசிரியர் கற்பித்த இலக்கணம் மாணவர்களுக்கு **உள்ளங்கை நெல்லிக்கனி போல** தெளிவாக விளங்கியது.

# மொழியோடு விளையாடு

## எண்ணங்களை எழுத்தாக்குக.

| | |
|---|---|
|  | ஓர் இனத்தின் வரலாறு தமிழன்.<br>உளி வைத்த இடங்களெல்லாம் சிலைகளும் ஓவியங்களும்.<br>ஆதியில் எண்ணங்களைத் தெரிவிக்க சைகைகளைக் காட்டினான்.<br>பிறகு குரலைப் பயன்படுத்தினான், சொற்களைக் கற்றுக்கொண்டான்<br>தலைமுறைக்குத் தெரிவிக்க எண்ணி பாறைகளில் குறியீடாக்கினான்<br>எழுத்து வடிவங்களை கல்வெட்டுகளில் பொறித்தான்.<br>உடைகளில்லா காலத்திலேயே உளியால் செதுக்கியவன் தமிழன்<br>கலைகளின் தலைமகன் தமிழன்டா.. |

## அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.

| | |
|---|---|
| குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்<br>தாயின் குரலில் உயிரின் ஒலி. | **விடை:**<br>உயிரின் ஒலி அது உள்ளத்தின் ஒலி<br>உள்ளத்தின் ஒலி உண்மை பேசும்<br>உண்மையைப் பேசி குழந்தையை வளர்க்கும். |

## குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.

ஆக. 2021; செப். 2020 ; அரை.தேர்வு 2023, 2024

எ.கா. கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – கவிமணி

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். **விடை:** **மறைமலை அடிகள்**
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். **விடை:** **தமிழ்ஒளி**
3. சிறுகதை ஆசிரியர் ; முதல் பாதி நவீனம். **விடை:** **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். **விடை:** **கோதை**

## கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்...

**விடை :**

வேப்பமரத்தால் ஆன மரப்பாச்சி பொம்மை ஒன்று என் வீட்டில் நெடுங்காலமாக இருந்தது. மிகுந்த அன்போடு அதற்கு என் பெயரை வைத்திருந்தேன். எத்தனையோ வாசனைகளை அதன்மீது பூசினேன். ஆனாலும் அந்தக் கசப்பின் வாசம் போகவில்லை. இரவில் அதன் மெல்லிய விம்மல் ஓசை கேட்கும்...

அந்த ஓசையால் எனக்குத் தூக்கமே வராது. ஒவ்வொரு நாளும் இப்படியே தூக்கம் வராமல் தவிப்பேன். ஒருநாள் நான் அந்த மரப்பாச்சி பொம்மையை எடுத்து வந்து தெருவில் நண்பர்களோடு விளையாடினேன். விளையாடி விட்டு நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். நான் இரவில் தூங்கும்போது மரப்பாச்சியை என் தலை அருகே வைத்துக் கொண்டு தூங்குவது என் வழக்கம்.

அன்று உறங்கச் செல்லும் மரப்பாச்சியைத் தேடினேன். மரப்பாச்சியைக் காணவில்லை. எனக்குத் தூக்கமே வரவில்லை. என்ன செய்வதென்று புரியாமல் தவித்தேன். என் நினைவுக்கு வந்தது மதியம் 1 மணிக்குத் தெருவில் விளையாடினோம். பொம்மையைத் திரும்ப வீட்டிற்கு எடுத்து வரவில்லை. நான் மறுபடியும் இரவு 11 மணிக்கு விளையாடிய இடத்திற்கு வந்து பார்த்தேன். என்னைப் போலவே பொம்மையின் கண்களில் நீர் கசிந்தது. துடைத்துக் கொண்டே பொம்மையை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன்.

என் அம்மாவை எழுப்பி “அம்மா... அம்மா... நான் பொம்மையை மதியம் எடுத்துக் கொண்டு போய் தெருவில் விளையாடினேன். அங்கேயே வைத்துவிட்டு வந்தேன். நான் மறுபடியும் இப்போது போய்தான் எடுத்து வந்தேன். எடுக்கும்போது பொம்மை ஈரமாக இருந்தது மா... அழுது அழுது... ஈரமாயிடிச்சிமா” என்றேன்.“பொம்ம அழுவாது பனியில் நனைந்ததால் அது ஈரமாயிடுச்சி. நீ போய் படுமா” என்றாள்.

“அப்படியா மா” என்றுக் கூறிக்கொண்டே படுத்தேன். என் மீது மரப்பாச்சி பொம்மையை வைத்துக் கொண்டேன். அப்போதுதான் எனக்கு நிம்மதியாக தூக்கமே வந்தது.

**செய்து கற்போம்.**

**1. தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்களுள் எவையேனும் மூன்றினைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.**

**தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் தொகுப்பிலிருந்து...**

**தம்பிக்கு அண்ணாவின் கடிதம் :**

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிசினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே, நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்து வந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்.

நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்து கொள்வதில் முற்பட்டிருக்கிறேன். எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்கு தடையற்ற நிலையில் இருந்து வந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன். ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன், ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது – பிறகு – விடு – அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, “உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!” என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.

“தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்.”


– என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ் மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை!
பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக!
வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

14.1.1968

அண்ணன்,



www.surabooks.com

**மகளுக்கு நேருவின் கடிதம்:**

இந்திரா பிரியதர்ஷினிக்கு அவருடைய தந்தை ஜவஹர்லால் நேரு எழுதியுள்ள கடிதத் தொகுப்பைக் கொண்ட 'உலக வரலாறு' (Glimpses of World History) என்ற நூலில் தந்தைக்கும் மகளுக்கும் இடையே ஆன ஒரு பிணைப்பினையும், பாசத்தையும் உணரமுடியும்.

**கடைசி கடிதம் 9.8.1933**

மலையளவு எண்ணிக்கையில் கடிதங்கள் எழுதிவிட்டேன். அப்பப்பா. எவ்வளவு உள்நாட்டுத் தாளில் எவ்வளவு உள்நாட்டு இங்க் பயன்படுத்தியுள்ளேன். அவையனைத்தும் பயனுள்ளதா என நினைந்து வியக்கிறேன். இந்த அனைத்து தாள்களும், இங்கும் உனக்கு ஆர்வத்தைத் தூண்டும் செய்தியைத் தருகின்றதா? நீ 'ஆம்' என்றுதான் கூறுவாய். ஏனென்றால் வேறுவிதமாக மறுமொழி கூறினால் நான் சங்கடப்படுவேன் என்று நினைப்பாய். அவ்வாறான ஒரு நிலையை எடுக்கும்போது பாரபட்சமாகவே இருப்பாய்..........

நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். உனக்காக எழுதுகிறேன். உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். காலங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன........... நான் இக்கடிதங்களில் சொன்னதே இறுதியானது என நீ எடுத்துக்கொள்ளக்கூடாது... இக்கடிதங்கள் அனைத்தும் மெல்லிய நூலால் இணைக்கப்பட்ட ஓர் அழகான வடிவமே... சில நூற்றாண்டுகளை விட்டுவிட்டேன். சில முக்கியமான நிகழ்வுகளையும் விட்டுவிட்டேன். அதே நேரத்தில் எனக்கு ஆர்வமானவை பற்றி அதிகம் எழுதியுள்ளேன்....

ஒரு மேல் தோற்றமாகத் தந்துள்ளேன். இது வரலாறன்று. இவை நமது கடந்த காலப் பதிவுகள். வரலாறு உனக்கு ஆர்வமூட்டினால் வரலாற்றின் அழகை நீ உணர்ந்தால் பல நூல்களின் துணையோடு கடந்த காலத்தைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.....

நூல்களைப் படிப்பது மட்டுமே உனக்கு உதவப்போவதில்லை. கடந்த காலத்தைக் கருணையோடும் புரிதலோடும் நோக்கவேண்டும். பல்லாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு நபரைப் பற்றி அறிந்துகொள்ள அவருடைய சூழலையும், அவர் வாழ்ந்த நிலையையும், அவர் மனதில் இருந்த எண்ணங்களையும் நீ அறிந்துகொள்ளவேண்டும்...

கவிஞர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் நான் உனக்காக பல மேற்கோள்களைச் சுட்டியுள்ளேன். இன்னுமொரு மேற்கோளுடன் இதனை முடிப்பேன். அது தாகூர் எழுதிய கீதாஞ்சலியிலிருந்து...... 'மனமானது எங்கு பயமின்றி இருக்கிறதோ.....'

நம் பணி நிறைவுற்றது. இந்தக் கடைசி கடிதமும் முடிந்தது. கடைசிக்கடிதம்? உண்மையில் இல்லை. இன்னும் பல கடிதங்களை எழுதுவேன். இந்த வரிசைக் கடிதம் முடிகிறது.......... (ப.954)

**மு. வரதராசனார் தம்பிக்கு எழுதிய கடிதம் :**

அன்புள்ள எழில்,

நீ எழுதிய கடிதங்கள் எனக்கும் சுவையாக இருந்தன. அன்னைக்கு எழுதிய கடிதங்களை அண்ணன் எப்படிப் பார்த்தான் என்று நீ எண்ணி வியப்பு அடையலாம். உன் கடிதங்கள் அன்னை மட்டும் அல்லாமல் அண்ணனும் படிக்க வேண்டிய கடிதங்கள்தான்.

நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள்; மாய்ந்து வருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராதவகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச் சான்றுகள் காணலாம். தமிழ்நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காணவில்லையா? ஜெர்மனி, ஜப்பான் முதலான வல்லரசுகள் அழிவுற்றதைக் கண்கூடாகக் காணவில்லையா?

நல்ல மருமகளாக வந்து வாழத் தொடங்கிக் குடும்பத்தாரின் இன்னலைப் பொறுக்க முடியாமல் தற்கொலையாலோ மனவேதனையாலோ மாண்ட கதைகளை ஊர்களில் கேட்டதில்லையா? மகனையும் மருமகளையும் விருப்பம்போல் ஆட்டி வைத்து வல்லமை பெற்ற மாமியார், நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழவேண்டும்.

www.surabooks.com

தமிழ்மொழி நல்ல மொழி தான்; ஆனால் அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமா? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதிமன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

தம்பி! இன்றைய உலகம் வல்லமை மிகுந்த மாமியார்போல் உள்ளது. நம் அருமைத் தமிழகம் மிக நல்ல மருமகளாக உள்ளது. ஆனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நிற்காதவாறு காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. என் கருத்தில் எந்தப் பகுதியாவது உனக்குத் தெளிவில்லாமல் இருந்தால் அதைக் குறித்து எழுது; தெளிவுபடுத்துவேன். ஏதாவது உனக்கு உடன்பாடு இல்லாமல் கருத்து வேறுபாடாக இருந்தால் எண்ணிப்பார்; அல்லது விட்டுவிடு. நான் என்ன செய்வேன்? நீ எவ்வளவு உண்மையாக உணர்கிறாயோ அவ்வளவு உண்மையாகவே நானும் உணர்கிறேன். இந்தத் தமிழகத்தில் நாம் இருவராவது ஒன்றுபட முடியாதா, பார்ப்போம்.

உன் அன்புள்ள,
மு.வரதராசனார்.

## நிற்க அதற்குத் தக.

**குறிப்பேடுகள் உருவாக்குதல், சேகரிப்பு, ஏதேனும் கலை பயிலல்**

| | |
|---|---|
| கலைகளில் உங்களுக்குப் பிடித்த வடிவங்கள் எவை? காரணம் என்ன? | தெருக்கூத்து. காரணம், என் தந்தை தெருக்கூத்துக் கலைஞர். அதனால் அதன்மீது ஈர்ப்பு அதிகம். |
| நீங்கள் எந்தக் கலையில் வல்லவர்? | தெருக்கூத்து |
| ஏதேனும் கலை பயில நினைத்தால் உங்கள் தேர்வு எதுவாக இருக்கும்? | தெருக்கூத்து |
| பொழுதுபோக்காகப் பொருள்களைச் சேகரிப்பதில் ஆர்வம் உண்டா? ஆம் எனில் எவையெவை எனக் குறிப்பிடுக. எ.கா. அஞ்சல் தலை, நாணயங்கள் | ஆம், விதவிதமான தாவரங்களின் இலைகள். |
| பொன்மொழிகள், குறிப்புகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதிக் குறிப்பேடு தயாரிக்கும் வழக்கம் உண்டா? ஆம் எனில் அவை எத்தகையவை எனக் குறிப்பிடுக. | ஆம், அறிவை வளர்க்கும்படியான, கலாச்சாரம் மற்றும் தகவல்களை அறியும்படியான பொன்மொழிகள், குறிப்புகளாக அவை இருக்கும். |
| நாள்குறிப்பு எழுதுவீர்களா? ஆம் எனில் எத்தகைய குறிப்புகளை எழுதுவீர்கள்? | ஆம், ஒவ்வொரு நாளும் நடந்த நிகழ்வுகள். |

**படிப்போம் பயன்படுத்துவோம்**

| | |
|---|---|
| Anthropology - மானுடவியல் | Fine Arts - கவின் கலைகள் |
| Archaelogy - தொல்லியல் | Field Study - கள ஆய்வு |
| Research - ஆராய்ச்சி | Epigraphy - கல்வெட்டியல் |

## அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| பாரதியின் கடிதங்கள், பாரதி கட்டுரைகள், பாரதி கதைகள் | - ரா.அ. பத்மநாபன் |
| இலக்கண உலகில் புதிய பார்வை | - டாக்டர் பொற்கோ |
| சுவரொட்டிகள் | - ந.முத்துசாமி |
| நெல்லூர் அரிசி | - அகிலன் |
| தமிழ் வளர்த்த அழகுக்கலைகள், மறைந்துபோன தமிழ்நூல்கள் | - மயிலை சீனி. வேங்கடசாமி |

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

மார்ச் 2020

1. **நகமும் சதையும் போல :**

கமலாவும் கீதாவும், **நகமும் சதையும் போல** இணை பிரியாத தோழிகளாக இருந்தார்கள்.

**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்குரிய விடை தருக.** ஆக. 2021

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி. குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்.

**வினாக்கள் :**

1. குழந்தையின் மனவளர்ச்சி எதனுடன் தொடர்புடையது?
2. மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் _______ ஆகும்.
3. தாயின் முதல் வேட்கையாக இருப்பது என்ன?
4. மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?

**விடைகள் :**

1. மொழி வளர்ச்சி
2. அரியதொரு கலை
3. தன் குழந்தையுடன் பேசுதல்
4. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெறும்.

☆ ☆ ☆



www.surabooks.com